சிஞ்சிட்டு தே. 2141.

குடி அரசு

தலைப்பதித்த ஒரு அணை.

வருட சந்தா முன் பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1—12
வேள் நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விதம்

மலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-வரு மார்கழி-மீ 11-உ (25—12—1932) | மலர் 35.

உண்மையை உணரவேண்டுமா? அப்படியானால்

இந்தியாவின்

தலைபாடுகள்.

The Crux of the Indian Problem

என்னும் புஸ்தகத்தை வாங்கிவாசியுங்கள்.



இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பராஞ்சிபே M. A. D. Sc., அவர்களால் எழுதப்பட்டு, லண்டன் பகுத்தறிவு சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அற்வும், அனுபவமும், ஆராய்ச்சியும் கொண்டதான அறிய நூல் (+இன் தமிழ் மொழி பெயர்ப்பு) ஆகும். இதில் 1. இந்தியாவின் கல்வி, 2. மதம், 3. வகுப்பு போராட்டம், 4. மதபுத்தகங்கள், 5. மதபுத்தகங்களிலுள்ள குற்றங்கள், 6. பகுத்தறிவும் மதமும், 7. மனைவியின் மர்மம், 8. மதமும் ஒழுக்கமும், 9. சோஷியலிஸமும், முதலிய தலைப்புகளைக் கொண்ட அத்தியாயங்களும், ஆழ்ந்த கருத்துக்கள் கொண்ட முகவுரை, முடிவுரை ஆகியவைகளும் கொண்ட 160—பக்கம் உள்ள பெரிய புஸ்தகம். இதில் எப்படிப்பட்ட தேசியம் வேண்டும்? எப்படிப்பட்ட அரசியல்வேண்டும்? என்பவைகளைப்பற்றியும், யாவற்றிற்கும் இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி எற்படவேண்டியதே முக்கிய தேவை என்பதுபற்றியும் தெளிவான நடையில் எழுதப்பட்டதாகும்.

இதன் விலை அணு ... ... 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு ... 0—6—0

மொத்தமாய் வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



Dr, R. M. Shastry's

Ayurvedic Golden Tonic.

(Registered by the Government of India)

"பல டாக்டர்களின் நன்மதிப்புப்பெற்றது."

உத்திரவாதமுள்ளது உடனே பரீட்சித்துப்பாருங்கள்.

மேல்கண்ட கோல்டன் டானிக்கு தன் குறைந்த மதிப்பு (விலை விலையு)டன், உயர்ந்தி விற்கப்படும் இதர ஆயுள்வேத ஔஷதங்களோப் பக்தயத்திற்கு அழைக்கிறதென்றால்! இதன் குண சிரேஷ்டத்தைப்பற்றி இன்னும் எவ்வளவோம் பகழ்ந்திதழுதுவது:—

உண்மையில்—இரத்தசுத்தி, இரத்தவிர்த்தி, தேகபலம், தேகபுஷ்டி, மனோதிடம், காதுலர்த்தி, முகதேகம் முதலிய பல தன்மைகளை அடைய விரும்பும் ஆண், பெண் எல்லா வயதோரும் இதை கட்டாயம் ஒரு தடவையாகிலும் உபயோகிக்கும்படி தயார்ச செய்திறோம்.

இதனால்—பாண்டு, காமாலை, கை கால் எரிதல், வாய்ப்புண், வாய்நாற்றம், குலிகநோய், இருதய அதர்ச்சி, கை கால் வலி, அல்லது சோர்வுண்டாதல், இடுப்புநோய், மூத்திரத்தோடு தாது போதல், மூத்திரம் பலவித நிறங்களாகவும் அடிக்கடிப்போதல், மலபந்தம், மலத்தோடு சிழ் அல்லது ரத்தம் போதல், பகியின்மை, பலவித சிரங்குகள், உன்மத்தம், கோம்பல், கால்பட்ட சூடு முதலிய பல நோய்களை நிவர்த்திப்பதோடும், ஸ்திரிகளுக்கு மாத—ருதுகாலங்களில் உண்டாகும் தலைவலி, கழுத்திழுப்பு, தலை சுற்றல், வயிற்றுவலி மூட்டுகளின் வீக்கம், அகால மாதருது முதலிய பல கேடுகளை உண்மையில் நிவர்த்திப்பதில் சிறம்பவும் அனுபவப்பட்டது.

மற்றும்—உட்காச்சலாய் (கணச்சூடு) தசைப்பற்றுக்குறைந்து காரங்கு சான் மெலித்து இளைத்துப்போகும் மானவர்களுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் தேக புஷ்டியையும், ஆத்ம சக்தியையும், மூளைக்குப் பலத்தையும் கொடுப்பதில் இது சஞ்சீவிக்கு ஒப்பானது.

15-வயதுக்கு மேற்பட்டவர்கள் ஒரு புட்டி டானிக்கும், மேற்பட்டவர்கள் இரண்டு புட்டி டானிக்கும் சாப்பிடவேண்டும்.

12 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூபா 1—8—0. வி. பி. சிலவு அணா 15. இரண்டு புட்டிகளுக்கு வி. பி. சிலவு ரூ. 1—7—0.

விலாசம்:— Dr. R. M. Shastry
Ayurvedic Golden Tonic Pharmacy.
Post-Rakah Mines
Singhbum Dist. (N. India)

Read.
The 'Citizen'
and become a
True Citizen.
The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.
For advertisement please apply to:—
The Publisher
The Citizen
36, East Andar Street,
Teppakulam, Trichy.

"குடி அரசு"
கிடைக்குமிடங்கள்.

தஞ்சாவூர்.
மணியம் பிரதர்ஸ்,
ரயில்வே ஸ்டேஷன் ரோடு.
பாபநாசம். அப்துல்காதர் சாயபு,
இரும்புவியாபாரம்.
காஞ்சீபுரம். எஸ். கே. எல்லப்பன்,
திருப்புக்குடல் வீதி.
கோயமுத்தூர்.
வி. சங்கராஜலு, தீபஸ்
ஏஜண்ட், ராஜவீதி.
சேலம். சித்தய்யா,
தனலட்சுமி விலாஸ் பேங்க்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மதுரையில்
குடி அரசு நிடைக்குமிடம்.
எம். முத்துசாமி
ஜெனரல் நியூஸ் ஏஜன்சி
கீழவெளிவீதி மதுரை.

உங்கள்
கண் ணையும்
காதையும்
கவனித்துக் கொள்ளுங்கள்
பூவிழல்!!
கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு!!
பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதுரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.
விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.
"Sri" Works
Beadon St. Calcutta

"தமிழன்"
ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.
தமிழர்களுக்காகத் தனராதுழைப்பவன் தமிழன். வெட்டுஒன்றுதுண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற சுண்டனங்கள். அறிஞரின் அதிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.
வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.
விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்

குஷ்டம்
வெண்குஷ்டம் - பத்து.
சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 1- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.
Post Box No- 11413
Calcutta- (k)

'சமத்துவபோதினி'
தாழ்த்தப்பட்டார் சமத்துவம் ஏன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை
ஆசிரியர்- வி. ஐசுதன்.
வருஷ சந்தா—2—8—0
விலாசம்:—சமத்வபோதினி
டிக்கோயா சிலோன்.

What is wanted? Swaraj or Socialist Raj?

எதுவேண்டும்?

சுயராஜ்ஜியமா?

சமதர்ம ராஜ்ஜியமா?

[தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(1)

"எது வேண்டும் சொல் மனமே? மூடர் உறவு வேண்டுமா? அல்லது தெரிந்தோர் உறவு வேண்டுமா"? என்ற பழங் கேள்வி ஒன்று நமது ஞாபகத்திற்கு வருகிறது. தற்கால கேள்வி என்ன வெனில் எது வேண்டும்? சுயராஜ்ஜியமா? அல்லது சமதர்மமா? இதுதான் தற்கால இந்திய பிரச்சினை. இதுதான் உலக பிரச்சினையும். இந்த பிரச்சினைக்குக் கொடுக்கும் விடையில்தான் 160 கோடி உலக மக்களின் சுகா சுகங்கள் அடங்கியுள்ளது. (It is in the solution of this problem lies the happiness or misery of 1600 millions of the human race. In part this is the crux of the humau problem) இதுதான் மனித பூண்டின் முக்கிய பிரச்சினை.

சுயராஜ்ஜியம் என்றால் என்ன?

உலகில் பண்டைய கால முதல் வழங்கிவரும் தேசிய ராஜியக்தான் சுயராஜியமெனப்படும். அது ராமராஜியமாயிருந்தாலும் சரி, அல்லது ராவண ராஜியமாய் இருந்தாலும் சரி, இவையாவும் சுயராஜியங்களே. அல்லது தற்கால பிரஞ்சு ராஜியமானாலும் சரி, பிரிட்டிஷ் ராஜ்ஜியமானாலும் சரி, இவையாவும் சுயராஜியமே. அல்லது மகாத்மா காந்தி கோரும் ராஜியமானாலும் சரி, தேசபந்துதால் கோரிய ராஜ்ஜியமானாலும் சரி, இவை இரண்டும் சுயராஜ்ஜியமே. உலகிலுள்ள ராஜ்ஜியங்களில் ஒன்றைத்தவிர மற்ற எல்லா ராஜ்ஜியங்களும் சுயராஜிய மாகும். இந்த சுயராஜியங்களில் ஒன்றுக்கொன்று மேல் கீழ் கிடையா. உயர்வு தாழ்வு கிடையா. இந்த சுயராஜியத்தை நடத்துகின்றவர்கள் (Democrat) அதாவது ஜனநாயக அரசியலாய் இருந்தாலும் (Republicans) அதாவது குடி அரசானாலும் இவ்விரண்டு வகையும் சுயராஜ்ஜியங்களே. அல்லது ராஜா அரசானாலும் அரசாயிருப்பினும் சக்ரவர்த்தி அரசானாலும் அரசாயிருப்பினும் அவ்வரசும் சுயராஜ்ஜியமே.

இத்தியாதி அரசுகள் யாவும் பலர் போல் சிலர் ஆசைப்படுகின்ற விஷயம் இவ்வரசுகளுக்குள்ள முக்கிய குறியாகும். இவ்வரசுகளுக்குறிய இரண்டாவது குறி என்னவெனில் தேசியத்தில் இந்த அரசுகள் யாவும் மூழ்கிக்கிடக்கின்றன. மூன்றாவது குறி என்னவெனில் சாமான்ய குடிகளுக்கு, அதாவது பெரும்பான்மையோருக்கு அவரவர் தேசத்தில் நடத்தும் அரசில் நேராக நடவடிக்கை நடத்தமுடியாது. பொதுவாக இம் மூன்று குணங்கள் இந்த சுயராஜியங்களுக்கு இருந்து வருகின்றபடியால் எவ்வளவு நல்லெண்ணத்தோடு எந்த நன்மை தங்கள் குடிகளுக்கு செய்யவிரும்பினாலும் அது நிஷ்பிரயோசனமாய் விடுகிறது. எனினில் காக்கைக்கு தன்குஞ்சு பொன் குஞ்சுபோல் அரசு ஆளுகின்றவர்களுடைய நன்மையே அவர்கள் கவனிப்பார்களேயொழிய பிரஜைகளுடைய சுகத்தை கவனிக்கமுடியாது. அது இயற்கைக்கு விரோதம் ஆனபடியால்தான் பாரத ராமாயணகாலமுதல் நாளதுவரை பெரும் பான்மையோர் தரித்திரத்திலும், பஞ்சத்திலும், நோயிலும் வாடிவதங்கி வந்திருக்கின்றனர்.

சுயராஜ்ஜியம் அதாவது தேசியத்தின் லட்சணம் பிரருடைய நாட்டைப்பிடிப்பதே இயல்பு. உலகில் நடந்தபோரெல்லாம் தேசியம்என்று சொல்லப்படும் மண்ணாசையாலேதான் புரியப்பட்டன. பாரதப்போர் மண்ணுக்காக, இராமாயணப்போர் பெண்ணுக்காக, மற்ற போர்கள் யாவும் மண்ணுக்காகிலும் அல்லது பெண்ணுக்காகிலும் புரியப்பட்டன. கிரீஸ் தேசச்சண்டைமுழுமையும்மண்ணுக்காகவே. எலன் (Helan) என்ற பெண்ணுக்காக டிராய் (Troy) அழிந்ததாம். ரோமதேச சண்டைகளே எடுத்துக்கொண்டாலும் கால்டியன் (Chaldean) சண்டையை எடுத்துக்கொண்டாலும் (4.00 B. C,) அஸ்சிரியன் (Assyrian) சண்டையை எடுத்துக்கொண்டாலும் ஈஜிப்ட் சண்டையை எடுத்துக்கொண்டாலும் எல்லாம் மண்ணேப்பிடிங்கிக்கொள்ளத்தான் நடந்தன.

ஐரோப்பா தேசச்சண்டையாவும், தேசியத்தின் பேரால்நடந்தவைகளே! (Seven years war) ஏழுவருஷத்துச்சண்டை[Thirty years war) முப்பது வருஷத்துசண்டை (Hundred years war) நூறு வருஷத்து சண்டை [Napoleanic war) நெப்போலியனது சண்டை [Russo Turkish war) ரஷ்யாதுருக்கிசண்டை (Chino-Japanese war) சீட ஜப்பான் யுத்தம் கேற்றுநடந்த உலக யுத்தம் (World war) எல்லாமேபொரும் தேசிய மண்ணை பிடிக்கவே புரியப்பட்டன. நமது இந்திய நாட்டின் மீது கஸ்நி மகமத் (Mohamád of Gazni) 24 தடவை படையெடுத்தானும்! கடைசியாக நமது பிரிட்டிஷாரும் நமது நாட்டை 100 வருஷம் போர் புரிந்து ஜெயித்தனர். கடந்த 5000 வருஷங்களாக நடந்த சண்டைகளால் மாண்டவர் எத்தனை? அழிவுகள் எத்தனை? பொருள் அழிவு எத்தனை? நாசமான நாடுகள் எத்தனை? கணக்கெடுக்க முடியுமோ? இவ்வளவும் தேசியத்தால் (Nationalism) வந்ததென உணர்க. காந்தியார் சுயராஜ்ஜியத்தில் இவ்விதப்போர் நடக்காதென்பது என்ன நிச்சயம்? இதுவும் தேசிய ராஜ்ஜியமாதலால் அதன் அறிகுறியாகிய போரும் நிகழாமல் இருக்காதென அறிக. "சாத்மீகம், சாதமிகம்" என்பதல்லாம் சமயோர்சித சொற்களேயொழிய கார்யாம்சத்தில் நடவா. என் தேசம், உன் தேசம் என்ற விஷயாசம் இருக்கும்வரை மீபார் நடந்தேதீரும். சுயராஜ்ஜியத்தில் இந்திய நாடு போராற்றவாழும் என்பது வீண்பேச்சு. இந்த தேசிய முதலாளிகளே, இந்த வர்த்தகர்களே! இந்த ஜட்ஜ்களே! இந்த லாயர்களே! சுயராஜ்ஜியத்தில் இருந்து அரசு புரியப்போகின்றவர்கள். இந்த முதலாளிகளே அரசு புரியப்போகின்றார்கள். இவர்களுடைய செல்வத்தையும், செல்வாக்கையும், ஆதிக்கத்தையும் விட்டு கொடுக்கப்போகின்றார்களா? சுயராஜ்ஜியம் ராமராஜ்ஜியத்தைப்போல் இருக்குமென்று சொல்லும்போதே அதன் லட்சணம் விளங்கிவிட்டது. ராமன் குழந்தை பருவமுதல் சாகும் வரை போர்புரிந்தே வந்திருக்க அஸ்வமேதயாகப் போரை பாருங்கள். ராமராஜ்ஜியம் சண்டை இல்லாமல் இருந்ததாகஎப்படிச்சொல்லக்கூடும்? கொன்றவனே காந்தியார் புகழ்ந்ததை யாரும் மறக்கமாட்டார்கள். அது தேசியமென்றால் அதைத்தான் காங்களும் சொல்வது. தேசியத்தில் எந்த தேசமானாலும் சரி, சண்டை இல்லாமல் போகாது என்கின்றோம்.

இரண்டாவது எந்த தேசியத்திலும் முதலாளிகளை ஆதரிக்காமல் இரார். மதங்களை ஆதரிக்காத தேசியம் உலகில் இல்லை. இருக்கப் போவதுமில்லை. தேசாக ஆதரிக்காவிடினும் பராமுகத்தோடாகிலும் மதங்களைதேசியம்தழுவியேதீரும். இதைச்செய்யாத சுயராஜ்ஜியம் எங்குமில்லை. தேசியம் அதாவது சுயராஜ்ஜியம் மதங்களை எதிர்க்காது உலகில் ஒரு நாட்டைத்தவிர மற்ற எந்த சுயராஜ்ஜிய நாடு, மதத்தை எதிர்த்துநிற்கின்றது? காந்தியார் சுயராஜ்ஜியத்தில் மதத்தை ஒடுக்கப்போகின்றாரா? அது இல்லை. தீண்டாதாரை கோவிலில் போகவிடுவதும், மதத்தைத்தடுப்பதற்கு அடையாளமல்ல. வர்ணாச்சிரமத்தை ஆதரிப்பதும் மதத்தை நழுவவிடுவதுமல்ல. இந்து மகமதிய ஒற்றுமை என்றபோதே இனிவரும் சுயராஜ்ஜியம் மதங்களை ஆதரிக்கும் சுயராஜ்ஜியமேயொழிய வேறல்ல. இதை நாம் வாதிக்கவேண்டியதேயில்லை. இவ்விரு மதஸ்தர்கள் செய்துக்கொண்ட ஒற்றுமை ஒப்பந்தத்தில் அவரவர் மதங்களை சுயராஜ்ஜியத்தில் ஆதரிப்பதாகவே உடன்பட்டுள்ளார்.

உலகிலுள்ள எல்லா சுயராஜ்ஜிய அரசுகளும் மதங்களைத்தழுவி நிற்பதற்குக்காரணமென்னவெனில் முதலாவது மதங்கள் தேசிய அரசை ஆதரிக்கின்றன. இரண்டாவது மதங்களின் ஸ்தாபனங்களில் அரசு புரிவோருக்கு செல்வாக்குண்டு. மூன்றாவது அரசு புரியும் வகுப்பாருக்கு பாமர மக்கள் மூடராய் இருக்கவேண்டியது அவசியமாகும். மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து பொது மக்கள் விடுபட்டால் தங்கள் ஆதிக்கத்திற்கு இடையூராய் இருக்குமென்ற பயம் அரசுக்கு இருக்கும். இத்தியாதி காரணங்களால் தேசிய ராஜ்ஜியங்கள் மதங்களையும், மூடப்பழக்க வழக்கங்களையும், பாதுகாத்து வருகின்றன. மூன்றாவது எல்லா சுயராஜ்ஜியங்களிலும் ஜாதிவேற்றுமை,இன வேற்றுமை இருந்தே தீரும். எல்லா தேசிய நாட்டிலும் முதலாளி என்றும், தொழிலாளி என்றும் வித்தியாசம் இருக்கின்றது. உயர்ந்தவன் [Lord] தாழ்ந்தவன் [Zamindar] ஜமீன்தார் ஒரு பக்கமும், தாழ்ந்தவன், பறையன், பள்ளன், மற்றொரு பக்கமும் இருப்பார்கள். ஜனசமூகத்தில் இந்த வேற்றுமைகள் இருந்தால்தான் முதலாளி அரசு செல்லும். இந்த இன வேற்றுமை, எந்த தேசிய நாட்டிலும் உண்டு. நமது காந்தியார் சுயராஜ்யத்தில் மாத்திரம் இந்த இனவேற்றுமை, இந்த ஜாதி வேற்றுமை, இல்லாமற் போகுமா? அது ஒரு போதுமில்லை. நமது காந்தியார் தீண்டாமையொழியவேண்டுமென்கின்றாரே ஒழிய ஜாதி ஒழிய வேண்டுமென்று சொல்வதில்லை. அவனவன் அந்தந்த ஜாதி வேலையைச்செய்ய வேண்டுமென்று கூடமகாத்மாகூறுகின்றார். இதுதான் "பகவத்கீதை" யும் கூறுவது. பகவத்கீதையைத்தான் தனது வேதமென்றும் கூறுகின்றார். பகவத்கீதை ஜாதியைப்பலப்படுத்த உண்டான நூலென அறிந்துகொண்டும். அதனால்தான் காந்தியாரும் அந்நூலை ஆதாரமாகக்கொள்வது. வேதங்களையும், புராணங்களையும், பகவத்கீதையும் அதிகாரமாகக்கொண்ட சுயராஜ்ஜியத்தில் ஜாதி இருந்தே தீரும். காந்தியார் சுயராஜ்ஜியத்தில் தீண்டாதாரை கோயிலில் அவர்

கும்பகோணத்தில் கூட்டம் சேர்ந்தால் காலரா வரும், பிளேக்கு வரும்.

உண்ணு விரதத்திற்காக விட்ட போதிலும் பறையனும், பள்ளனும், பறையனுகவும், பள்ளனுகவுமே மதிக்கப்படுவான். அதற்குச்சந்தேகமில்லை. எனெனில் பூநூலை அருக்காத காங்கிரல்காரன் இருக்கும்வரை—பறையனென்றும், பள்ளனென்றும், சர்க்கார் ரிக்கார்டுகளில் பதியும்வரை "தீண்டாமை ஒழிக" என்பது வெறும் [Camuflage] வேஷமென அறிக.

நான்காவது எல்லா சுயராஜிய தேசங்களில் ஓட்சி புரிவோர் இடத்தே எல்லா பொருளாதார செல்வாக்கும் இருந்துவரும். ஆதிக்கத்திற்கு அடையாளம் செல்வம். [Wealth] அரசு புரிவோருக்கு ஆதிக்கம் வேண்டும். இந்த ஆதிக்கத்திற்கே எல்லா செல்வத்தையும் தங்கள் கைக்குளடக்கி வைத்திருக்க வேண்டி வருகிறது. எல்லா வித பொதுச்செல்வங்களும்—நிலம், நீர், சுரங்கம், தொழிற்சாலை, ரயில், கப்பல், வீடு, மனை, கல்வி, பாங்கியாவும் அரசுபுரியும் இனத்தார் [Ruling Classes] கைபில் தான் இருக்கும். அமெரிக்க அரசும் பிரஞ்சு அரசும், ஜர்மனி அரசும், பிரிட்டிஷ் அரசும், மற்றுமுள்ள பெரிய சிறிய முதலாளி அரசுகளும் அவரவர் நாட்டின் பெரும் பான்மை பொது சொத்துக்குறியவர்களே. இவ்வுறிமையால்தான் மற்ற குடிகளாகிய பொருளற்றோரை அடக்கி ஆள முடிகின்றது. இச்செல்வப்பெருக்கால்தான் தங்கள் ஏகாதிபத்திய அதிகாரம் செல்லுகின்றது. இந்தபொருளாதார செல்வாக்கைக் கொண்டுதான் இந்த சிறுபான்மையோர் பெரும்பான்மையோராகிய குடிமக்களை அடக்கி ஆண்டுவருவது. இந்த நிலைமை காங்கிரல் சுயராஜ்யத்தில் மாறுமா? புலியும் பசுவும் ஓர்துரையில் நீர் அருந்தினலும் அருந்தும். ஆனல் முதலாளியும் தொழிலாளியும் சரி சமத்துவமாக உலகப் பொருள்களை காந்தியார் சுயராஜ்யத்தில் அனுபவிப்பார்கள் என்பது பகற்கனவே. தனது சுயராஜ்யத்தில் தொழிலாளிக்கு முதலாழி தர்மகர்த்தாவாக இருக்கவேண்டுமாம்! முதலாளியை தொழிலாளி எதிர்க்கக்கூடாதாம்!!! தொழிலாளி பொருளாளியாகக் கோரக் கூடாதாம்!!! இந்த "தருமநிலையைத்தான்"; காங்கிரசும், பார்டோலி திட்டத்தில் வற்புருத்தியுள்ளது. காந்தியார் சுயராஜ்யத்தில் முதலாளிகள் தொழிலாளர்களுக்கு டிரஸ்டி (Trustee) களாக இருக்கவேண்டுமென்றுல் மற்ற தேசிய சுயராஜ்யங்களுக்கும், காந்தியார் சுயராஜ்யத்திற்கும் என்ன வித்தியாசம்? அதைவிட்டு, இதைக் கோறுவானேன்?

ஐந்தாவது எல்ல தேசியா ராஜ்யங்களில் தனி சொத்துரிமை பாதுகாக்கப்படும். காந்தியார் சுயராஜ்யத் திட்டத்திலும் முக்கியமாக சொத்துரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது. புதிய அரசியல் திட்டத்திலும், (The New Constitution) தனி சொத்துரிமை பாதுகாக்கப்பட்டிருக்கிறது. மேற்று ஏற்பட்ட புது "குடி அரசு"களில் ஜர்மனி, (Germany) போலண்ட் (Poland) முதலிய தேசிய அரசுகளில் தனி சொத்துரிமை பாதுகாப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்தப்பாதுகாப்பின் லட்சணம் என்னவெனில், உலகம் இரண்டு வகுப்பாகப் பிரிந்திருக்கும் காட்சியாகும். உடையவன், இல்லாதவன் என்று மனிதக் கூட்டம் பிரிந்து இருப்பது "இந்தத் தனி சொத்துரிமையால் நிகழும் வித்தியாசங்களென அறியவும். மகராஜன் எழை என்று, உலக மக்கள் பிரிந்திருப்பதும், இந்தப் பொருளாதார வித்தியாசத்தினுலென அறிக. முதலாளி, தொழிலாளி என்ற வித்தியாசமும்; எஜமான், வேலைக்காரன் என்ற வித்தியாசமும்; சுதந்தரக்காரர் (Freeman) அடிமை (Slave) என்னும் வித்தியாசமும் மக்களுக்குள் ஏற்பட்ட காரணம் சிலரிடம் பொருள்தங்கவும், பலரிடத்தில் வேறேதுமில்லாமையாலுமென அறிக.

இந்தப் பொருளாதார வித்தியாசம் (Economic inequality) ஆதிகாலத் தொடங்கியே நீடித்துவந்திருக்கின்றது. ராம ராஜ்யத்திலும், தசரத ராஜ்யத்திலும் இந்த வித்தியாசம் இருந்தேவந்தது. இன்றைக்கும் பிரிட்டிஷ் ராஜ்யத்திலும் இருந்தேவருகிறது. நாளைக்கும் சுயராஜ்யத்தில் இருந்தேவரும். இதற்கு என்ன தடை? தனி சொத்துரிமை (individual ownership) பாதுகாக்கும்வரை சிலரிடத்தே பொருள் தங்கும். பலர் பட்டினிகிடக்கவேண்டியதே. தண்ணீர்ப்பள்ளத்தை நோக்குவதைப்போல் செல்வம், பணம் படைத்தவனிடம்தான் குவியும். இல்லாமை அதாவது வறுமை எழை மக்களிடந்தான் தங்கும். இந்தத் திட்டத்தைமாற்றியாவரும் தனது சுயராஜ்யத்தில் சொத்துரிமையைப் பெறமாட்டார் காந்தியார் வொருசொல் லேனும் சொல்லவில்லை. சத்தாரா ஆசரியுங்கள், பஞ்சமஹா கோயில்வீடுங்கள் என்று உபதேசிக்கின்றனர். சத்தாரால், அதாவது சுதேசியத்தால் சிலர்மாத்திரம் பணக்காரர்களாகும் பொருளாதாரத் திட்டத்தை (Economic Law) உணர்ந்தார் இல்லை. கோயிலில் ஆறுகோடி தீண்டாதாரை விடவேண்டும். அல்லாவிடில் பட்டினிகிடந்து சாவேன் என்று பயமுறுத்துகின்றனரே வொழிய, அந்த ஆறுகோடி பஞ்சமனுக்கு நிலமில்லாமல், நீரில்லாமல், குடிக்கக் கஞ்சி இல்லாழல் சாகின்ற கொடுமையைக் கவனித்தாரா? இல்லை. மற்ற தேசியகாடுகளில் உள்ள மகராஜனும், ஏழையும், உடையவனும் (Haves) இல்லாதவனும் (Have nots) முதலாளியும், தொழிலாளியும், சிலரிடம் செல்வப் பெருக்கும், பலரிடம் தரித்திரமும், சிலரிடம் வீண்செலவும் (Waste) பலரிடம் சிக்கனமும் (Economy) இருக்கின்றதுபோல் இந்திய சுயராஜ்யத்திலும் இருக்குமாகையால் நமது சுயராஜ்யத்தின் விசேஷமென்ன?

இந்தப் பொருளாதார வேற்றுமை உள்ளவரைஎந்தஅரசியலினும்சரி, சுதந்தரமும், சமத்துவமும், சகோதரத்துவமும், எதிபதெல்லாம் பொய்ப்பேச்சு. உடையவனுடைய பொருளைக் காக்க எல்லா போலீசும், எல்லா நீதியும், எல்லா சேனை சிப்பந்திகளும் ஏற்பட்டுள்ளன. ஆனல், எந்த இல்லாதவனுடைய வறுமையைப் போக்க எந்த நியாயம், எந்த சட்டம், எந்த அரசு ஏற்பட்டுள்ளது. இனி வரும் சுயராஜ்யத்தில் நினம் ஒன்றுக்கு ராட்டினத்தைச் சுற்றி ஐந்துபைசா சம்பாதியுங்கள் என்று திட்டமிடப் போகின்றனர்கள். இந்த ஐந்துபைசாவைக்கொண்டு உண்ண உணவு உடுக்க உடையும் இருக்க வீடும், தனக்கும் தன் சம்சார குழந்தைகளுக்கும் சம்பாதிக்கவேண்டும். இதுதான் நமக்கு காந்தியார் கொண்டுவரும் பெரும் சுயராஜ்யத்தில் இடப் போகும் தன்கொடை!! ஆனல், அந்த சுயராஜ்யத்தில் ஒருவனிடமிருக்கும் கரத்தினமிழைத்த நகைகளும், பங்களாக்களும், தோட்டம் துரவுகளும், ரத்தின நாற்காலி, மேஜை, சோப்பாக்களும், வீடு வாசல்களும், மோட்டார்கார்களும், தாசிவேசிகளும், குடிகூத்திகளும் தொடப்படாதாம்!! அசைக்கப்படாதாம்!!! இந்த நிலைமைதான் சுயராஜ்யத்தில் காக்கப்படுமென்று அரசியல் திட்டமும் செய்துளது!!!! இந்த சுயராஜ்யத்தைவிட நமது இந்திய சுடுகாடே மேலென்பதற்கு என்ன சந்தேகம்?

இந்தப் பொருளாதாரவித்தியாசத்தால்தொழிலாளிக்குதொழில் நிச்சயமும் இல்லை (Security of Service) போதுமான வருமானமும் இல்லை [Living Wage] இவ்விரண்டும் தற்கால உலகப் பொருளாதாரத் திட்டத்தில் (Current Economic System) கிடைப்பது இயலாமை. இந்தப் பொருளாதாரத் திட்டத்தை மேற்கொண்ட சுயராஜ்யத்திலும் தொழிலாளிகளுக்கு வேலை நிச்சயமும் கிடைக்கப்போவதில்லை போதுமான சம்பளமும் கிடைக்கப் போவதில்லை. அடிமைத் தொழில் நீங்கப் போவதில்லை. இந்தத் திட்டத்தை அனுசரித்துவரும் தேசிய ராஜ்யங்களில் [Nationalist Government] இம்மூன்று பொருளாதார செல்வாக்கும் [Economic Advantage) தொழிலாளிக்குக் கிடைக்காமலிருக்க, நமது சுயராஜ்யத்தில் மாத்திரம் எப்படிக் கிடைக்கும்? தனி சொத்துரிமையோடு இணை பிரியாமல் இருப்பது பொருளாதார அடிமைத்தனம் ஒன்றே (Economic Bondage) இந்த அடிமைத்தனம் நீங்கினல் ஒழிய தொழிலாளிகளுக்கு வேலை நிச்சயமும் ஏற்படாது. போதுமான உணவும் அகப்படாது. இவ்விரண்டும் கிடைக்காத சுயராஜ்யம் வந்து என்ன? வராமையாலுமென்ன? இந்தச் சந்தர்ப்பத்தில் தொழிலாளரும், விவசாயிகளும் மற்றுமுள்ள பொது ஜனங்களும் அறிந்து கொள்ளவேண்டியது என்னவெனில் காந்தியார் இந்தப் பொருளாதார அடிமைத்தனத்தை நீக்க ஒரு வார்த்தைகூட சொல்வதில்லை. 'கத்தர்,' 'கோயில்பிரவேசம்,' 'தீண்டாமை,' 'தருமகர்த்தர்கள்' இந்த சொற்களைத்தான் பல்லவியாகப் பாடிவருகின்றனர். இச் சொற்களால்தான் இவரை சுற்றியுள்ள முதலாளிகள், வர்த்தகர்கள், பணக்காரர்கள், பார்ப்பனர்கள் இவரை மதித்துவருகின்றனர்கள். இச் சொற்களால்தான் அவருக்குள்ள எல்லா செல்வாக்கும். இச் சொற்களை விட்டு விட்டு வேலைநிச்சயம், போதுமான உணவு என்ற பொருளாதாரப் பாடலைப் பாடுவாரேயானல் இவருக்குள்ள தேசமதிப்பும், செல்வாக்கும் ஒரு நிமிஷத்தில்பறந்துபோகுமென அறிக;

சுருங்க உரைக்கில், காந்தியார் சுயராஜ்யத்தில் தனி உடமை (Individual ownership) ஆதரிக்கப்படும் அதில் அடங்கியுள்ள பொருளாதார அடிமைத்தனமும் நிலைத்திருக்கும். தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் தொழில் நிச்சயமில்லாமையும், உண்ணப் போதுமான உணவு இல்லாமையும், இன்றைக்கு இருந்தவாறே இருந்தேவரும். தோழர்களே! இந்த சுயராஜ்யமா வேண்டும் எனக் கேட்கின்றேன்? எனெனில் காந்திராஜ்யத்தில் தற்போது இருக்கும் நிலைமை இருந்தேவரும். ஆயிரம், பதினுயிரம் பேர் எல்லா நிலங்களையும், கீர்களையும், தொழிற்சாலைகளையும், ரயில்வேக்களையும், வீடுகளையும் பங்கிகளையும். சொந்தமாக ஆண்டு வருவார்கள். கோடானகோடி மக்கள், இழைஎதுவும் சொந்தமின்றி உண்ணப் போதுமான உணவின்றி அறிவு விளங்கசரியானகல்வியின்றி, இருக்கச் சுகாதார வீடின்றி, போதகூலிக்கு உழைத்தே வரவேண்டும். வேலையில்லாமலும் தெருவில் நியங்கவும் வேண்டிவரும். அதுதான் சிலருடைய நற்பாக்கியம். இதுதான் பெரும்பான்மையோரின் துர்பாக்கியம்.

ஆதலால் இந்த நிலைமை மாறி, எல்லா மக்களும் சரி சமத்துவத்துடன் வாழவேண்டுமானல், சமதர்ம ராஜ்யத்தில்தான் முடியும், ஆதலால், தோழர்களே- இந்த சமதர்ம ராஜ்யம் (Socialism) வேண்டுமா எனக் கேட்கின்றேன்? இனி சமதர்மத்தை விளக்குவோம்.

காங்கிரஸ் எழைகளுக்கு பயன்படுமா?

சட்டமறுப்பு—வரிமறுப்பு—

இவற்றின் சூழ்ச்சிகள்.

உண்மை கலப்பு மணம் எது.

—:0:—

தோழர் ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயா அபிப்பிராயம்.

கவியரசி தோழர் சரோஜனி தேவியாரின் சகோதரரும் தோழர் கமலாதேவி சட்டோபாத்யாயாவின் கணவரும் கீழ்நாட்டிலும், மேல்நாட்டிலும் சிறப்புப் பெற்ற சங்கீத வித்பன்னரும், நடிகரும், கவியும், மேல்நாடுகளில் சுற்றுப் பிரயாணஞ்செய்து அனுபவம் பெற்றவருமான தோழர் ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயா அவர்கள் சில தினங்கட்குமுன் இவ்வூருக்கு விஜயஞ் செய்திருந்தார். அவர் கன்யாகுமரியில் தங்கியிருந்த காலத்து இங்கு சுயமரியாதை வாசிப்புசாலையைச் சேர்ந்த அன்பர்கள் சிலரும், ஒரு காங்கிரஸ் வாதியும் அவரைக் காணச் சென்றிருந்தோம். அவரோடு சுமார் இரண்டு மணிநேரம் தற்கால நிலையைப்பற்றி இன்பமாக உரையாடிக் கொண்டிருந்தோம். சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி அவர் ஏற்கனவே அறிந்திருக்கிறார். சமீபத்தில் நிகழ்ந்த சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கெடுத்துச் சிறைசென்று மீண்டவர்களில் இவரும் ஒருவர். சட்டமறுப்பு, தீண்டாமைவிலக்கு, காங்கிரசின் கொள்கைகள் முதலிய பல விஷயங்களைப் பற்றியும் அவர், தமது கருத்துக்களை வெளியிட்டார். "குடி அரசு" வாசகர்களுக்கு அவை பெரிதும் பயன்படுமெனக் கருதி அவற்றைச் சுருக்கி இங்கு குறிப்பிட முன்வந்தேன் அவரது உயரிய கருத்துக்கள் வருமாறு:-

மதம்.

மதம் மக்களுக்கு அபின். இந்திய மக்களுடைய ரத்தத்தில் மத உணர்ச்சி ஊறிப் போய்விட்டது. இதனால்தான், இந் நாட்டில் தாம் விரும்பும் எக் காரியத்தையும் எளிதில் நிறைவேற்றக் கருதுகிறவர்கள் தமது நோக்கத்தையும், செய்கைகளையும் மதத்தோடு சம்பந்தப் படுத்தி விடுவது வழக்கமாக இருந்துவருகிறது. இந்திய சரித்திரத்தைப் படித்தால் இதன் உண்மை நன்குவிளங்கும். இந் நாட்டைக் கைப்பற்ற முயன்ற ஒவ்வொருவரும் தத்தம் மதத்தையும் மத ஸ்தாபனங்களையும் நிலைநாட்டியே தமக்கு ஆக்கந்தேடியிருக்கின்றனர். அதேபோன்று காந்திஜியும் தமது இயக்கத்தைக் கடவுளோடும் மதத்தோடும் சம்பந்தப்படுத்தியுள்ளார். பாமர மக்கள், விஷயத்தின் காரண காரியங்களை நன்கு பகுத்துணரும் ஆற்றல் பெற்றிராததால் மதமெனும் வலையில் எளிதில் சிக்குண்டுவிடுகின்றனர்,

கதர்.

உதாரணமாகக் கதரை எடுத்துக் கொள்வோம். ராட்டினம் விஷ்ணு சக்கரமென்றும், அதுசுழலும்போது எழும் சப்தம் "ராம், ராம்" என முழங்குகிறதென்றும் கூறுகிறார்கள். கதர்மக்களுக்கு ஏழ்மைத் தன்மையை நீக்குவதற்காகப் பிரசாரஞ் செய்யப்படுகிறது. நூற்பவர்களும், நூற்றநூலை நெய்பவர்களும் எழைகள் ஒருநாளெல்லாம் ஓருவர் நாம்நூல் தான் அனேகமாய் ஒரு அணாகிடைக்கும். மிற்ற துணியில் கிடைக்கும் லாபத்தில் பெரும்பகுதியும் சர்க்கா சங்கத்தையே சேர்கின்றது. எழைத் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதென்ன? லாபம் முழுவதும் அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்படுகின்றதா? ஏழைகள் பெயரைச் சொல்லி வயிறு வளர்ப்பவர்களும், சம்பாதிப்பவர்களும் யார்? மேலும் தங்களுடைய ஜீவனோபாயத்துக்கு "எந்நாளும் பணக்காரர் தயவை எதிர்பார்த்துத்தான்ஆகவேண்டு"மென்ற நிலைமையைத் தானே இந்தக் கதர் வலியுறுத்துகின்றது?

காந்திஜி,

காந்திஜி ஆரம்பத்தில் சிறந்த நோக்கத்தையே கொண்டிருந்தார். அப்பொழுது நாட்டில் அவருக்குப் பெருத்த செல்வாக்கிருந்தது. பின்னர், அவர் சந்தர்ப்பத்துக் கேற்றபடி, தமது செல்வாக்கை நிலைநிறுத்த தமது போக்கை மாற்றிக்கொண்டார். தென்னப்பிரிக்காவில் இருந்த காந்திஜி வேறு; 1921 ல் இருந்த காந்திஜி வேறு; 1932 ல் இருக்கும் காந்திஜி வேறு. அக்காலத்தில் அவர் தமது "யங் இந்தியா' பத்திரிகையில் எழுதியுள்ளகட்டுரைகளையும், பிற்காலத்தில் எழுதியுள்ள கட்டுரைகளையும் படித்துப் பார்த்தால் வித்தியாசம் விளங்கும். கதரே உயிர் என்று கருதியவர் பின் மில் துணிக்கும் ஆதரவு வளிக்க முன்வந்தார்! ஏன்? அவர் சட்டமறுப்பு ஆரம்பித்தபோது மில் துணி வியாபாரிகளும்; ஆலை முதலாளிகளும் பதினையிரக் கணக்காக அவருக்கு ரூபாய்கள் உதவினர்கள். இதனாலேயே அவர்களுக்குச் சலுகை காட்ட முன்வந்தார். வியாபாரிகள் யோசனையற்றவர்கள் அல்ல. லாபமின்றி எக்காரியத்திலும் புகமாட்டார்கள். பின்வரும் சுய லாபத்தைக் கருதியே சட்டமறுப்பு இயக்கத்துக்கு நன்கொடையளித்தார்கள். சட்டமறுப்பு இயக்கத்தால் மிகுதியும் பாதிக்கப்பட்ட ஏழைகளை மறந்துவிட்டு, "நான் முதன் முதல்பம்பாய் வியாபாரிகளுக்கு நன்றிசெலுத்த வேண்டும்" என அவர் சட்டமறுப்பு நின்றதும் தமது முதற் பிரசங்கத்தில் குறிப்பிட்டார். இன்றளவும், பர்டோலி விவசாயிகள் நூற்றுக்கணக்கானபேர் யாதொரு கதியுமின்றித் தவிக்கின்றனர். சட்டமறுப்பு இயக்கத்தால் ஏழைகட்குக் கிடைத்ததென்ன? அவர் செய்த ராஜி ஒப்பந்தத்தில் கஷ்டப்பட்ட ஏழைகளுக்கு என்ன சாதகம் கேட்டுக்கொண்டார். ஏமாந்து போனதுதான் மிச்சம்! இதனால் காந்திஜியின் செல்வாக்குக் குறைய ஆரம்பித்தது. குறைந்த செல்வாக்கைப் பழையபடி நிறப்பவே மீண்டும் பொதுஜன கவனத்தைத் தன்பால் இழுக்க ஒரு புது யுக்தியைக் கண்டுபிடித்தார்.

உப்புப் போர்.

உப்புப் போர் ஒரு பெரும் போராக ஏற்பட்டது. பாமர மக்களிடையே எது அதிகக் கிளர்ச்சியை உண்டு பண்ணும் என்பதைக் கண்டுபிடிப்பதில் காந்திஜி சிறந்த நிபுணர். உண்மையில், உப்புப் போரில் எவ்வித அர்த்தமுமில்லை. கடற்கரையை அடுத்த கிராமப் பக்கங்களிலுள்ளவர்கள் இஷ்டம்போல் எப்பொழுதும்உப்புக் காய்ச்சிக்கொண்டுதான் இருந்தனர். இதைபாரும் தடுக்கவில்லை. பம்பாய் முதலியகர்ப்புறங்களிலேயே சர்க்கார்உப்புதயாரிக்கின்றனர்.உப்புப்போர் கிராமவாசிகளுக்குப் புதிதாக எவ்வித நன்மையையும் செய்யாவிட்டாலும் ஏழைகட்காக காந்திஜி பாடுபடுகின்றார் என்ற உணர்ச்சியை உண்டுபண்ண இத் தந்திரம் மிகுந்த சாதகமாக இருந்தது. உப்புப் போரில்கூட மத உணர்ச்சி கலக்கப்பட்டது. உப்புப் போருக்குப் போகும்போது காந்திஜி ராம பஜனையைத்தான் செய்து கொண்டேபோனார். தேசீயப் பஜனைகளிலும் கடவுளைப்பற்றிய பாட்டுக்கள்தான் அதிகம்.

தீண்டாமை விலக்கு.

காந்திஜியின் தீண்டாமை ஒருசிறு விஷயம். இதற்காகப்பட்டினிகிடந்தார். பத்திரிகைகளெல்லாம்இதைப்பிரமாதப்படுத்தின. எங்கும்கிளர்ச்சிஏற்பட்டது. பொதுஜனகவனம்காந்திஜியால் ஈர்க்கப்பட்டது; இதனால் அவருக்குச் செல்வாக்கும் ஏற்பட்டது. இந்தியாவினுடைய பொதுக் குறைகளை நிவர்த்திக்க முன்வந்த காந்திஜி தான் ஒரு ஹிந்து என்ற அளவில் இவ் விஷயத்தில் நின்றுவிட்டார். பலன் ஏற்பட்டது என்ன! உடம்பினுல் ஏற்பட்ட நோயைத் தீர்க்க வெளியில் பூச்சுப் பூசுவதுபோல். தீண்டாமை ஏற்பட்டதின் உண்மையான காரணங்களைக் கவனியாமல் அதை ஒழிக்க முயலாமல் "தீண்டாமை விலக்குப்" பிரசாரம் செய்கிறார்கள்.

சமபந்திபோஜனம்.

சமபந்தி போஜனத்தால் தீண்டாமை போய்விடும் என்பது நினைப்பதற்கு இடமில்லை. உயர் சாதியாளுருவன் தாழ்ந்த சாதியானுடன் சமமாக உட்கார்ந்து சாப்பிடும்போது 'நாமும் உயர்சாதியாளுகிவிட்டோம்' என தாழ்ந்த ஜாதியான் நினைப்பதில்லை. ஆனால் ஒரு உயர்சாதியாளுடன் சமமாக அமரும் பாக்கியம் கிடைத்தது எனத்தற்பெருமை கொள்கின்றான். இதனால் மனத்திலுள்ள வேறுபாடு மாறவில்லை. வித்தியாசமாக நினைப்பதே மாறவேண்டும். சர்க்கஸ் கொட்டகைக்குள் ஓநாய், புலி, கரடி, சிங்கங்களுடன் ஆடும் இருந்து சாப்பிடுகிறது. இதனால் அவை ஒன்றுக்கொன்று விரோதபாவத்தை யொழித்து சிநேகபாவம் கொண்டுவிட்டன என்று கருதமுடியுமா? சட்டசபை கோர்ட்டு பள்ளிக்கூடம், சந்தை, ரயில்வண்டி, மோட்டார் பஸ் முதலிய இடங்களில் எல்லா சாதியினரும் ஒன்றுகத்தான் இருக்கின்றனர். இதனால் தீண்டாமை போய்விட்டதா? ஆகவே கோவிலுக்குள் போவதால் தீண்டாமை போய்விடுமா?

கலப்புமணம்.

மணம் என்பதற்கு அர்த்தமிருப்பதாக நான் கருதவில்லை. எதிர் காலத்தில் மணம் ஒரு பழங்கதையாகவும், மூடப்பழக்கமாகவும் கருதப்படும் என நான் நம்புகிறேன். அத்தகைய காலம் விரைவில் வரப்போகிறது. மணம் என ஒன்று இருப்பதுவரை எத்தனைய வித்தியாசமுமின்றி எல்லா மதத்தினரும் தத்தமக்குள் கலப்பு மணம் புரிதல்வேண்டும். மதங்களுகுள் கலப்பு ஏற்பட வேண்டும். முஸ்லீம் கிறிஸ்துவரையும், இந்து முஸ்லீமையும் மணஞ் செய்யவேண்டும். அதுமட்டுமன்றி ஐரோப்பியர், இந்தியர், அமெரிக்கர், என்ற வேறுபாடின்றி தேசங்களுக்குள்ளும் கலப்பு மணம் நிகழவேண்டும். இந்திய இரத்தம் பிரதேச இரத்தங்களோடு கலக்கவேண்டும். அதுதான் உண்மையான—பயன்தரத்தக்க—கலப்புமணமாகும்.

தேசீயம்.

தேசியம் என்று சொல்வதே ஒரு மயக்கமாகும். அதற்குப் பொருளேயில்லை. இதுவும் மூடக்கொள்கைகளில் ஒன்றுதான். நம்மைபறியாமலே இவ்வுணர்ச்சி ஒவ்வொருவர்

தொடர்ச்சி 16 ம் பக்கம் பார்க்க.

தோழர், ச. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் கிளர்ச்சி.

(C. S. B. A.)

இந்திய தேசியத் தலைமையை இழந்து, இந்து ஆஸ்திகத்திற்குத் தலைமைபூண்டு, நிற்கும் தோழர் காந்தியை முன்னிட்டுக் காட்டில், நடைபெறும் கிளர்ச்சியை, தென்நாட்டில் வளர்ப்பவர் தோழர் ச. ரா. ஆச்சாரியார் ஆவர். அவர்பேச்சையும், எழுத்தையும், போக்கையும் ஊன்றிப்பார்க்க, அதில் அவர்உழலும் மயக்கத்தின் தன்மையையும், அவர் கிளர்ச்சி எல்லாம் வீழலுக்கு இரைத்த நீராகவே முடியும் என்ற முடிவையும் காணலாம்.

தோழர் ச. ரா. நவம்பர் மீ 25 ஆ பத்திரிகைகளில் வெளியிட்டதைப் பார்க்க.

"தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்சனையில் நிர்ணய வைதீகர்கள் காட்டும் மூட்டாள்தனமான பிடிவாதம், கிறிஸ்துவப் பாதிரிகள் தீண்டப்படாதார் வறுமையையும், அறியாமையையும் துணைகொண்டு அவர்களை தம் மதம் புகச்செய்யும் முயற்சி, ஆகிய இவைகளுக்கிடையில் எதுகொடிது என்று குறிப்பிடுவது எளிதல்ல.

பத்திரிகைகளில் வெளிவரும் தன் பிரசங்கத்தில் தீண்டாமையை ஒழிக்க நிற்கும் இயக்கத்தை இடையே தூற்றாமலும் ஸ்ரீ சங்கராச்சாரியார் தன் ஆட்களை சில கிராமங்களுக்கு அனுப்பி அங்கு நடப்பது என்ன என்பதை அறியட்டும். "அதிக பல மடத்து சன்னியாசியும் "ஆயுத்தி, ஆயுத்து அயம் அயம்" என்ற மாறுபடி நிற்கும், கர்ணருக்குக் கத்தி ஆடிப்பகைவிட்டு ஸ்ரீ ரங்கத்தினின்றும் இளம்பி தூத்தப்பட்ட வைதீக இருப்பிடம் சென்று அவர்தம் பிரமஹம் புகும்கோலத்தைக் காணட்டும்.

மத அதிகார பலம்கொண்ட இந்த நல்ல சாது ஜனங்களும் அவர்களை முகஸ்துதி செய்து வயிறு வளர்க்கும் மற்றவர்களும் இந்துமதத்தை வலுப்படுத்த வேண்டியனவே செய்யார்கள். என்? தீக்கு இரையாகி அழியும் இந்துசமயத்தை காப்பாற்ற பிறர் தெருப்போடுக்கும் இயந்திரம் கொண்டுவந்தால் வழியில் நின்று தடுக்கின்றார்கள்.

கிறிஸ்துவ சங்கத்தினர் இலர் மற்ற பெரும் மதங்களுடன் ஒன்று கூடி தீண்டாதாரை தன்மையையும் எதிர்த்து அழிக்க வேண்டுமென்று அறிவுறுத்துகின்றனர். 'இந்த நிலையில் வேண்டுவது ஆண்மையும் ஞானமுமே.' என்று எழுதி இருக்கிறார்.

இவை தோழர் ச. ரா அவர்களின் வெளியீட்டின் முக்கிய பாகங்களாகும். ஸ்ரீ சங்கராச்சாரியாரை ஒரு பிராமணர் சபையில் இழுத்துவிட்டது இதுவே முதற்படையாரும். இவைக் கண்டு தோழர் சுத்தியமூர்த்தி போன்றார் கண்கள் சிவக்கலாம். இந்த பிடாதிபதிகள் ஊரில் அடிக்கும் பகற்கொள்ளையில் பங்குகொள்ளும் பிராமணர்பலர் தோழர் ச. ரா. அவர்கள்மீது சிறி விழலாம்.

மற்றும் சிலர் சங்கராச்சாரியாரை மட்டும் தன் ஆட்களைவிட்டு தீண்டப்படாதார் நிலையை அறியச் சொல்கையில் ஏனை அகோபில மடத்து சன்னியாசியை நேரில் பார்க்கச் சொல்லவேண்டும் என்று கேட்பர்! பிற சமயவாதிகளிடம் சற்று மரியாதையாக இருப்பதாகவே தோழர் ச. ரா. காட்டிக்கொண்டாலும் வைதீகர்த்த வெறியர்கள் கூப்பாடுபோட்டே தீருவார்கள் என்பது நிச்சயம்.



29-11-32 ந் தேதி திருச்சியில் நடந்த தோழர்கள் மஞ்சுளாபாய்—ஜாலஜி ராவ் சுயமரியாதைத் திருமணத்தை முன்னிட்டு ஈரோட்டில் ஈ. வெ. ரா. வீட்டில் நடந்த தேநீர்விருந்தின் போது எடுத்தபுகைப்படம்.

ஸ்ரீ சங்கராச்சாரியாரும், அகோபில சன்னியாசியும் மற்றும்பல மடாதிபதிகளும் தீண்டாமையை ஒழிக்க உதவி செய்வார்கள் என்று எதிர்பார்ப்பது தோழர் ச. ரா. அவர்களின் முதல் மயக்கமாகும். இந்த மடாதிபதிகள் இந்த நல்ல சாது ஜனங்கள் யாவர்? இவர்கள் அறிஞர் ராதாகிருஷ்ணன், தால்ஸ்டாய், டாகூர் போன்ற தத்துவஞானிகள் என்று சொல்லப்படும் கூட்டத்தில் சேர்க்கத் தக்க தகுதி உடையவர்களும் அன்று. சீரிய ஒழுக்கத்தில் சிறந்தவர்களும் அன்று. பெரும் பொருளுடையாரும் அன்று. சகலமும் சாஸ்திர சமயாசமயப்படி அமைத்த இந்துமதத்தின் தலைவர்களாய் விளங்கும் ஒரே காரணத்தினால் எதோ மனிதர்களாக இப்பொழுது மதிக்கப்படுகின்றார்கள். இவர்களுடைய இன்றய வாழ்விற்கு கிழக் குருட்டு ஷாஆலம் போன்ற இந்துமதமே காரணம். இந்துமதமோ தீண்டாமையை அடிப்படையாகக்கொண்டு நிற்கின்றது. ஆகவே தீண்டாமை மறைதல் என்பது இந்துமத அழிவேயாகும். இந்து சமயம் வீழ்ந்தால் கள்ளர்களும், கயவர்களும் முதல்எழுத்தறியாதமூடகாமணிகளும் மடாதிபதிகள் ஆவதுஎங்கனம்! அவர்களுக்குப் பாத பூஜை எதி? பார்த்துணரும் கண்ணில்லாப்பாவிக்கு கண்ணாடி என்செய்யும் எண்ணுங்கால் எல்லாம் இருட்டு" என்ற வாறு பகுத்தறிவு இல்லாத மக்களால் தீண்டாமை விலக்கு இயக்கத்திற்கு உதவி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது வீண் பகற்கனவாகவே முடியும்.

பிரஜாஉரிமைக்குப் போராடும் ஒருவன் அரசனின் துணையை எதிர்பார்ப்பது அறியாமைதானே! இவ்வாறே சமய சமூக சீர்திருத்தத்திற்கு உழைக்கும் ஒருவன் சமயவாதிகளின் ஒத்துழைப்பையும் சாஸ்திர சம்பிரதாயக்களின் ஆதரவையும் எதிர்பார்த்தால் அவன் முயற்சி எல்லாம் பொய் மான் கேட்டையாகவே முடியும் என்பதை தோழர் ச. ரா. அறியார்போலும்.

மேலும் "ஆதிதிராவிடர்கள் கிறிஸ்துவ மதத்தில் சேருகின்றனர். ஆகவே இந்துசமயம் அழிந்துவருகின்றது" என்று அக் கடிதத்தில் குறிப்பிடுவதைக் காண்க. ஆதிதிராவிடர்களோ மற்றவர்களோ நம் சமயத்தில் நம்பிக்கையற்று, பிறமதம் புகுவதால் நம் மதத்திற்கு விளையும் தீங்குதான் என்ன? நம் நாடு உறும் கேடுதான் என்ன? இப்படிப்பட்ட நம்பிக்கை அற்றவர்கள் ஒழிந்தால் நம் சமயம் கலை எடுத்தாற்போல் தூய்மைதானே உறும். ஒரு சேனையில் உள்ள பேடிகளும் கோழைகளும் அகன்றுவிட்டால் அந்த சேனைக்கு பலம் வருமா அன்றி வலிமை குறையுமா?

"சகல சமயங்களும் ஈசுவர சம்மதம் எல்லா மதங்களும் அவனை அடையத் தக்க மார்க்கங்கள் மதங்களில் ஒன்றிற்கொன்று ஏற்றதாழ்வு இல்லை" என்று ஒருபுறம் எழுதுவதும் பேசுவதும் மற்றொருபுறம் "கிருஸ்துமதம் நாளுக்குநாள் பெருகுகின்றதே! இந்துசமயம் நினைதோறும் குறைந்து வருகின்றதே!" என்று பதறுவதும், கதறுவதும் என்? இதுகு தோழர் ச. ரா. அவர்களின் இரண்டாவது மயக்கத்தைக் காண்க.

இந்துசமயத்தில் இருப்போர் சிலரோ பலரோ பிறமதம் புகுவதால் பிறந்த நாட்டைத் துறந்து விடுவார்களோ? அன்றி நாய் பாஷையை மறந்துவிடுவார்களோ? அல்லது அரபிப்பாலைவனத்தில் மறைந்துவிடுவார்களோ, அன்றி Dead Sea "டெட்சி"யில் மூழ்கி விடுவார்களோ? இல்லையே! மதமாற்றத்தால் சற்று கொள்ளும் உணவில் மாறலாம். சிறிது உடுத்தும் உடையில் வேறுபடலாம். அப்பாகுட்டி, அப்பனேய்யங்கார் என்ற பெயர்களைத் துறந்து அப்துல்லா அன்றி அப்ரஹாம் என்ற பெயர்களை கொள்ளலாம். தேவாரம் பாடுவதை ஒழித்து தேம்பாவணி ஓதுவார்கள், பெரிய புராணத்தை விடுத்து சீராபுராணத்தைக்கொள்வார்கள், இத்தகைய மாற்றத்தை அன்றி மத மாற்றத்தால் நாட்டிற்கு ஏற்படக்கூடிய துன்பம்தான் என்ன?

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க.

மதத்தைப்பற்றி லெனின் எழுதியது.

2-ம் அத்தியாயம்.

மதத்தைப்பற்றித் தொழிலாளர் கட்சியின் அபிப்பிராயம்.

(The attitude of the workers towards Religion)

[S. R. & E. V. R. மொழிபெயர்ப்பு]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

லேட்டன் தேசங்களில் எ தேச்சவாதிகளும், பிளாங்விஸ்ட்டு Blunquists களும் ஜர்மனியன் டூரிங் Dhuring கிடையாய மாரு க்கனை ஜோகல்மோஸ்ட் Johnnost முதலியவர்களும் ஆஸ்ட்டிரிய தேசத்தில் 1880 ம் வருஷத்திற்குப் பிறகு விளங்கின எதேச்சைவாதிகளும் மதத்தின் பேரில் தொடங்கின யுத்தத்தை சொல்லளவில் மாத்திரமே மிகவும் அதிதமாகக் கொண்டுசெலுத்தினார்கள். இந்தக் காரணத்தினால்தான் மேற்கு ஐரோப்பிய சோஷியலிஸ்ட் ஜனாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மதவிஷயத்தில் எதேச்சைவாதிகளைப் போலவும் அவர்களுக்கும் ஒரு படி அதிகமாகவும் முறண்பாடு படும்படி நேர்ந்தது, இது இயற்கையேயாகும். ஓளவில் நாம் இதை மன்னிக்கவும்கூடும். ஆனல் நாம் நமது ருஷிய சோஷியலிஸ்ட் ஜனாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மேற்கு தேசங்களில் ஏற்பட்ட இந்த சரித்திரப் பூர்வமான விஷயங்களை மறக்துவிடக் கூடாது.

முதலாளி அரசாங்கத்தின் சூக்ஷி.

இரண்டாவதாக மேற்குத் தேசங்களில் தேசிய முதலாளி புரட்சிகள் முடிவடைந்தபிறகு அவர்கள் மனச்சாக்ஷிப்படி நடந்து கொள்ளுவதற்கு ஓளவில் சுதந்திரம் கிடைத்தபிறகு, முதலாளி ஜனாயகக் கட்சிக்கும் சோஷியலிட் கட்சிக்கும் யுத்தம் எற்பட்டி மதத்தின்பேரில் முதலாளிக்கூட்டத்தார் தொடங்கிய யுத்தம் பின்னடைந்து மறைந்து போயிற்று. ஆகையினல் இப்பொழுது முதலாளி கூட்டத்தைச் சேர்ந்த அரசாங்கத்தார் பொது ஜனங்களை சோஷியலிஸ்ட் சமதர்மச் சண்டையில் இருந்து இழுப்பதற்கு ஆகவேண்டி மறுபடியும் தங்கள் மதப் போராட்டத்தைத் தினப்பி இருக்கிறார்கள். இம்மாதிரி தந்திரமாக ஆரம்பிக்கப்பட்ட யுத்தங்களை ஜர்மனியில் குல்ட்டர் கேம்ப் Kultur-Kampf என்பதும் பிரான்ஸ தேசத்தில் முதலாளி "குடி அரசு" Bourgeois republicans கட்சியார்பாதிரிகள்பேரில் தொடங்கிய யுத்தமும் ஆகும். இந்தப்படி முதலாளி கூட்டத்தார் தொழிலாளி கட்சியை சோஷியலிஸ்ட் சமதர்மயுத்தத்தில் சேராமல் இருக்கும்படி தடுப்பதற்கு ஆகவே பாதிரிகள் பேரில் தங்கள் போலியுத்தத்தை ஆரம்பித்தார்கள். இந்தப் போலி யுத்தம் பலிதமாகாமல் போன பிறகுதான் தற்காலத்திய மேற்கு தேசத்திய சோஷியலிஸ்ட் ஜனாயகக் கட்சியார் மத விஷயத்தைப்பற்றி பாராமுகமாய் இருக்கிறார்கள், இதை நாம் மனப்பூர்வமாக அறிந்து ஒத்துக்கொள்ள வேண்டும். எனென்றல் இந்த சோஷியலிஸ்ட் ஜனாயகக் கட்சியார் முதலாளி கூட்டத்தாரும் பிஸ்மார்க்குப் போன்றவர்களும் தந்திரமாக சோஷியலிஸ்ட் சமதர்ம யுத்தத்தை அடக்கி மதாபிமானத்தை கிளப்பிவிடச் செய்த சூட்சியை எதிர்த்து நிற்கவேண்டி வந்தது.

ருஷிய நிலைமை.

ஆனல் ருஷிய தேசிய நிலைமை இதிலிருந்து மாறுபட்டிருக்கிறது. முதல் முதல் ஏற்பட்டிருக்கும் ஜனாயகப் புரட்சியிலேயே நிலைமை ஸ்தானம் தொழிலாளிகளுக்கு கிடைத்துவிட்டது. ஆகையால் தொழிலாளி கட்சியை பழைய மூடப் பழக்க வழக்கங்களுக்கும் பழைய அரசியல் மத ஸ்தாபனங்களுக்கும் விரோதமாய் யுத்தம் தொடங்கவும் இவைகளை புதுப்பிக்கவென்றே வெவ்வேறு பெயர்களால் ஸ்தாபிக்கும் முயற்சிகளை எதிர்க்கவும் முன் அணியில் நிற்கவேண்டும். ஆகையால் ஜர்மனி தேசத்து சோஷியலிஸ்ட் ஜனாயகக் கட்சியார், அரசாங்கம் சம்மந்தப்பட்டவரையில் மதம் அவரவர்கள் சொந்த விஷயம் என்னும்படியான தங்கள் கொள்கையைக் கைவிட்டு விட்டுத் தங்கள் கட்சி சம்மந்தப்பட்டவரையில் கூட மதம் அவரவர்கள் சொந்த விஷயம் என்று கூறியகாலத்தில் அவர்களை எஞ்சல்ஸ் மிதமாகக் கண்டித்துபோதிலும்கூட, அதே தப்பருத்தலைச் செய்யும் ருஷியதேச சமூக சமயோகிகளாகிறவர்களை எந்த எதிர்த்துக்கொள்ளுகிறார்கள் என்பதை விளக்கிக் காட்டுவதேயாகும்.

முன்னுரையாக மதம் அரசாங்கத்தைப் பொருத்தவரையில் என்ன நிலைமையில் இருக்கவேண்டும் என்பதை ஜர்மனி தேசத்து சமயோகிகளின் கூற்றின் உண்மை அருத்தம் என்னவென்பதை நமது பிரதிநிதிகள் விளக்கிக்காட்டுவார்கள்.

அத்தியாயம் 3.

தீவிர பிரகிருதிவாதத்தின் அந்தரங்கம்.

"Under the Banner of Marxian."

"மார்க்ஸ் கொடியன் கீழ்"

என்ற பத்திரிக்கையின் ஆசிரியரின் அறிக்கையைப்பற்றிய அபிப்பிராயம்.)

ஆண்டர் தி பேனர் ஆப் மார்க்கின். (Under the Banner of Marxian) என்ற பத்திரிக்கையை ஆதரிப்பவர்களில் எல்லோருமே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களாக இல்லாவிட்டாலும் எல்லோருமே உண்மை பிரகிருதி (உலகாதமம்) வாதிகளாகவே இருக்கிறார்கள் என்று ஏற்படுகிறது. என்னுடைய அபிப்பிராயத்தில் இம்மாதிரி கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவர்களுக்கும் அதில் சேராதவர்களுக்கும் கூட்டுமுயற்சி ஏற்படவேண்டியது அவசியமாகும். இந்த வேலைத்திட்டத்தின் பத்திரிகையின் சரியான வேலையாகும்.

கம்யூனிஸ்ட்டுகள் கடமை.

கம்யூனிஸ்ட்டுகளும் மற்றும் பொதுவாக ஒரு பெரிய புரட்சியை மேற்கொண்டு துவக்கிய ஒவ்வொரு புரட்சியாளர்களும் செய்யும் பெரிய ஆபத்தான பிசகு என்னவென்றால் ஒரு புரட்சியை புரட்சியாளர்கள் மூர்க்கமாக தனிமையில் நின்று நடத்தி முடிக்க முடியுமென்று நினைப்பதேயாகும். ஆனல் முக்கியமான புரட்சிவேலை மேற்கொள்ளுமானால் நம் முடைய மனதில் பதியவைத்து நடக்கவேண்டிய உண்மை ஒன்று உண்டு. அதாவது உண்மையில் தினமும் முற்போக்குகொண்ட மனிதனின் முன்அணியில் தங்கள் நின்று ஆயுதங்களை நடத்திக்கொண்டிருப்பதாக நினைத்துக்கொள்ளுகிறார்கள் என்பதை விளக்கிக் காட்டுவதேயாகும்.

முன்னுரையாக மதம் அரசாங்கத்தைப் பொருத்தவரையில் என்ன நிலைமையில் இருக்கவேண்டும் என்பதை ஜர்மனி தேசத்து சமயோகிகளின் கூற்றின் உண்மை அருத்தம் என்னவென்பதை நமது பிரதிநிதிகள் விளக்கிக்காட்டுவார்கள்.

அத்தியாயம் 3.

தீவிர பிரகிருதிவாதத்தின் அந்தரங்கம்.

"Under the Banner of Marxian."

"மார்க்ஸ் கொடியன் கீழ்"

என்ற பத்திரிக்கையின் ஆசிரியரின் அறிக்கையைப்பற்றிய அபிப்பிராயம்.)

ஆண்டர் தி பேனர் ஆப் மார்க்கின். (Under the Banner of Marxian) என்ற பத்திரிக்கையை ஆதரிப்பவர்களில் எல்லோருமே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களாக இல்லாவிட்டாலும் எல்லோருமே உண்மை பிரகிருதி (உலகாதமம்) வாதிகளாகவே இருக்கிறார்கள் என்று ஏற்படுகிறது. என்னுடைய அபிப்பிராயத்தில் இம்மாதிரி கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவர்களுக்கும் அதில் சேராதவர்களுக்கும் கூட்டுமுயற்சி ஏற்படவேண்டியது அவசியமாகும். இந்த வேலைத்திட்டத்தின் பத்திரிகையின் சரியான வேலையாகும்.

கம்யூனிஸ்ட்டுகள் கடமை.

கம்யூனிஸ்ட்டுகளும் மற்றும் பொதுவாக ஒரு பெரிய புரட்சியை மேற்கொண்டு துவக்கிய ஒவ்வொரு புரட்சியாளர்களும் செய்யும் பெரிய ஆபத்தான பிசகு என்னவென்றால் ஒரு புரட்சியை புரட்சியாளர்கள் மூர்க்கமாக தனிமையில் நின்று நடத்தி முடிக்க முடியுமென்று நினைப்பதேயாகும். ஆனல் முக்கியமான புரட்சிவேலை மேற்கொள்ளுமானால் நம் முடைய மனதில் பதியவைத்து நடக்கவேண்டிய உண்மை ஒன்று உண்டு. அதாவது உண்மையில் தினமும் முற்போக்குகொண்ட மனிதனின் முன்அணியில் தங்கள் நின்று ஆயுதங்களை நடத்திக்கொண்டிருப்பதாக நினைத்துக்கொள்ளுகிறார்கள் என்பதை விளக்கிக் காட்டுவதேயாகும். இந்த வேலைத்திட்டத்தின் பத்திரிகையின் சரியான வேலையாகும்.

கம்யூனிஸ்ட்டுகள் கடமை.

கம்யூனிஸ்ட்டுகளும் மற்றும் பொதுவாக ஒரு பெரிய புரட்சியை மேற்கொண்டு துவக்கிய ஒவ்வொரு புரட்சியாளர்களும் செய்யும் பெரிய ஆபத்தான பிசகு என்னவென்றால் ஒரு புரட்சியை புரட்சியாளர்கள் மூர்க்கமாக தனிமையில் நின்று நடத்தி முடிக்க முடியுமென்று நினைப்பதேயாகும். ஆனல் முக்கியமான புரட்சிவேலை மேற்கொள்ளுமானால் நம் முடைய மனதில் பதியவைத்து நடக்கவேண்டிய உண்மை ஒன்று உண்டு. அதாவது உண்மையில் தினமும் முற்போக்குகொண்ட மனிதனின் முன்அணியில் தங்கள் நின்று ஆயுதங்களை நடத்திக்கொண்டிருப்பதாக நினைத்துக்கொள்ளுகிறார்கள் என்பதை விளக்கிக் காட்டுவதேயாகும்.

மாமாங்கத்தால் என்ன பலன்.

ரயில்காரனுக்கு-கொள்ளை லாபம்
"விபசாரி"களுக்கு-விருந்து
கூட்டுகர்களுக்கு-கொண்டாட்டம்
பணக்காரக்கூட்டம்-தாண்டவமாடும்
பார்ப்பான் சங்கதி-பகரவும் வேண்டுமோ
ஏழைகள்பாடு-திண்டாட்டம்

மாமாங்கம் என்றால் என்ன? மடமக்களே! மாமாங்கத்திற்குப் போகிறீர்களா? வெட்கமில்லையா?

மக்களோடு நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொண்டு, அவர்களை சீதரிப்போகாமல் கட்டுப்பாடாக முன்னுக்கு நடத்திக்கொண்டு போகவேண்டிய ஜஸ்டிகட்சியைச் சேராத வர்களுடனும் பல துறைகளிலும் கலக்க கூட்டுறவு ஏற்படுத்திக் கொள்ளாதவரை கம்யூனிஸ்டுகளாக ஆக்க வேலைகள் எதுவும் செய்யமுடியாமல் போய்விடும்.

பிரகிருதிவாதத்தையும், மார்க்ஸ் கித்தாந்தையும் பாதுகாக்கும் வேலையை இப்பத்திரிகை மேற்கொண்டிருப்பதிலும் இதே கொள்கையைத்தான் அனுஷ்டிக்கவேண்டிவருகிறது.

ரஷ்ய தேசத்தில் முற்போக்கான சமுதாயக்கொள்கைகளில் ஈடுபட்டவர்களெல்லாம் கல்லி வேயாக பிரகிருதி வாதத்திலேயே நெடு நாளாக பற்றுகொண்டவர்களாய் இருக்கிறார்கள். பேர் சொல்லவேண்டுமானால் (G. V. Plekhanor) ஜத்தலிர Chernichevsky யை குறிப்பிடலாம். இவருடைய கொள்கைகளை ஒத்துக்கொண்ட பிறகே தற்காலத்திய (Narodnik) கட்சியார் சமயோசிதம்போல் தங்கள் கொள்கைகளை மாற்றிக்கொள்ள ஆரம்பித்து, ஐரோப்பிய விஞ்ஞான அறிவின் கவின முடிவுகளான மோகத்தில் ஈடுபட்டு பிற்போக்கான கொள்கைகளில் பற்றுக் கொண்டு பணக்கார ஆதிக்கத்தின் பலவிதப்பட்ட அடிமைத்தனத்திற்குள், கொணல்களுக்கு இரையாயிருக்கிறார்கள்.

எது எப்படி இருந்த போதிலும் ருஷ்ய தேசத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்த கூட்டத்தில் அனேக பிரகிருதிவாதிகள் இன்னும் இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் நெடுகாலைக்கு இருக்கவே இருப்பார்கள். ஆகையால் நாம் இந்தவித அறிவை பிற்போக்கான வழியில் செல்லவிடாமலும் படித்த வகுப்பாரின் கொள்கைகளுக்கு இணையாகாமலும் இருக்கச்செய்யும் முயற்சியில் நேர்மையாக திவ்ய பௌதிகவாதத்தை அனுஷ்டிப்பவர்களின் ஒத்துழைப்பை நாடவேண்டியது நம்முடைய முக்கிய கடமையாகும்.

படித்த கூட்டத்தார் பாதிரிகளின் கூலிகள்.

Dictazan ஐப்பற்றி ஒரு வார்த்தை. Dictazan என்ற பெயரோடு தகப்பன் மகன் ஆகிய இருவருண்டு மகன் டாம்பீகத்தில் தகப்பனைவிட இன்னுமவலட்சணமாவிட்டாலும் அறிவில் சூன்னியமானவன். இவ்விடத்தில் தகப்பனைப் பற்றி குறிப்பிடுகிறேன். பணக்கார வகுப்பின் ஆதிக்கங்களுக்கு உட்பட்ட தேசங்களில் செல்வாக்குப்பெற்று தத்துவஞானிகளுடையவும், பிரசாரகர்களுடையவும் மனதைக்கவர்ந்து வரும் தத்துவ அறிவுக்கொள்கைகளைப்பற்றி மார்க்ஸ் கொள்கையாளரின் அடிப்படையான மனப்பான்மை எப்படி இருக்கவேண்டுமென்று Dictazgen தெளிவாக விளக்கும் பாடமாத்தக்கூறி இருக்கிறார். தற்கால சமூக அபிவிருத்தியில் தத்துவ ஞானத்தை பொருத்தும் ஆசிரியர் "சன்னது பெற்ற பாதிரிகளின் கூலிகள்" அவர்கள் என்பது Dictzgen அபிப்பிராயம்.

மற்ற தேசத்திலுள்ளவர்களைப் போலவே ருஷ்ய தேசத்திலுள்ள படித்த கூட்டத்தார் தங்களை முற்போக்காளர்கள் என்று கருதிக்கொண்டு Dictzgen உடைய மேல்கண்ட அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். அவர்கள் அப்படி மறுப்பதற்கு காரணம் அவர்கள் உண்மையை வெறுப்பதேயாகும். தற்காலத்தில் படித்த கூட்டத்தார் அரசியல் துறையிலும், பொருளாதார சமூக விஷயங்களிலும் அதிகாரம் வகித்து ஆதிக்கம் செலுத்தும் பணக்காரர்களிடம் எப்படி அடங்கிநடக்க நேரிடுகின்றது என்பதை சற்று சுருக்கித்துப்பார்த்தால் Dictzen வெடுக்கென்று கூறிய வார்த்தைகள் உண்மை என்று புலப்படும். ஐரோப்பிய தேசங்களில் அடிக்கடி கிளம்பும் கவீன தத்துவ ஆராய்ச்சிகளிலும் பெரும்பான்மையானவைகளை சுருக்கித்துப்பார்த்தால் பணக்கார வகுப்பின் சுயநலமும் அவ்வகுப்பின் ஆதிக்கமும் எவ்வளவுதூரம் எல்லாவிதமான மதக் கோட்பாடுகளுக்கும் கவீன தத்துவஞானக் கொள்கைகளுக்கும் இடம் கொடுத்து காப்பாற்றி வருகின்றது என்பது விளங்கும். இந்த உண்மை Radium ரேடியம் கண்டுபிடிக்கப்பட்டபோது கிளம்பிய தத்துவஞான ஆராய்ச்சிகளிலும் தற்சமயம் Enstein ஈன்ஸ்டியன் மூலம் எறபட்டிபிருக்கும் தத்துவ ஞானக்கொள்கைகளிலும் விளங்குகின்றது.

கூலிகளை வெளிப்படுத்தியாக வேண்டும்.

இதுவரையில் நாம் எழுதியதிலிருந்து ஒன்று தெளிவாக புலப்படும். அதாவது தீவிர பிரகிருதிவாதியாக இருக்கவிரும்பும் ஒரு பத்திரிகையானது "சன்னதுபெற்றுப்பாதிரிகளின் கூலிகளாய்" விளங்குகிறவர்கள் விஞ்ஞான சாஸ்திரங்களின் அதிகாரத்தோடு பேசினாலும் அல்லது அவர்கள் தனித்தனியாக தங்களை ஜனநாயகத்தில் பற்றுக்கொண்ட தீவிரவாதிகள் எனக்கூறிக்கொண்டாலும், அல்லது தங்களை சமதர்ம (சோஷியலிஸ்ட்) கொள்கைகளில் பற்றுக்கொண்ட பொது ஜன சேவகர்கள் என்று கூறிக்கொண்டாலும் அவர்கள் நடத்தையை இடைவிடாமல் கண்டிப்பாய் வெளிப்படுத்தியே ஆகவேண்டும்.

நாஸ்திகப் பிரசாரம் செய்தாகவேண்டும்.

இரண்டாவதாக இம்மாதிரி பத்திரிகை தீவிர நாஸ்திகத்தையே பிரசாரம் செய்து வரவேண்டும், நமது ருஷ்ய தேசத்தில் (புரட்சிக்குப்பின்) இந்த வேலையைச்செய்ய நமக்கு தனி டிபார்ட்மெண்டுகளும் சர்க்கார் ஸ்தாபனங்களும் இருந்து வருகின்றன. என்றாலும் இவ்வேலை மிகவும் மெதுவாகவும் நிருப்தியற்றமாதிரியிலும் நடைபெறுகிறது. இதற்கு காரணம் என்னவென்றால் பழய அதிகார வர்க்கபழக்கங்கள் புதிய சோவியத் ஸ்தாபனங்களிலும் புகுந்திருப்பதாய் இருக்கலாம். இந்த நிலையில் தீவிர பிரகிருதிவாதத்தை நிலைநாட்ட உத்தேசிக்கும் பத்திரிகையானது சற்றேனும் தாமதிக்காமல் நாஸ்திகப்பிரசாரம்செய்து போர்தொடுத்து நாஸ்திகத்தைப் பரப்புவதாயிருந்தாலும்கூட அந்த முதன வேலைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் கவர்மெண்ட் ஸ்தாபனங்களை சீர்திருத்தியும், அதிகவேலை செய்யும்படி தூண்டியும், அவர்கள் விட்டுவிட்டவேலையை தானேசெய்து முடித்தும், கவர்ன்மெண்டார் வேலைக்குப் பக்கபலமாக விளங்கவேண்டிவரும் இவ்விஷயத்தைப் பற்றிய பல பாஷைகளிலும் வெளிவந்துள்ள நூல்களையெல்லாம் வெகு கவனமாக ஆராய்ந்து அவைகளில் கொஞ்சமாவது உபயோகப்படக்கூடிய பாகங்களை எல்லாம் மொழிபெயர்க்கவோ, அல்லது அவைகளைப்பற்றி மதிப்புரை எழுதவோவேண்டும்.

பதினெட்டாவது நூற்றாண்டின் கடைசியில் வெளிப்பட்ட தீவிர நாஸ்திகப் பிரசுரங்களை மொழிபெயர்த்து தற்காலம் பொதுமக்களிடம் வினியோகிக்க வேண்டுமென்று வெகுகாலைக்கு முன் ஏஞ்சல்ஸ் தொழிலாளர் தலைவர்களுக்கு உபதேசம் செய்தார். இதுவரை அவர்கள் சொற்படி நடவாதது நமக்கு பெரிய வெட்கக்கேடான காரியமாகும். புரட்சிக் காலங்களில் அதிகாரத்தை கைப்பற்றுவது சுலபமென்றும், பிறகு அந்த அதிகாரத்தை சரிவர உபயோகப்படுத்துவது கடினமென்றும் சொல்லப்படுவதற்கு இதுவே தக்க சான்றாகும்.

போலி சமாதானம்.

இந்தவிஷயத்தில் நாம் மிதமாகவும் சோம்பலாகவும் ஒன்றும் செய்ய முடியாமலிருந்ததற்கும் சால்சவாப்புகள் வெகு ஜம்பமாக சொல்லப்படுகின்றன. உதாரணமாகப் பதினெட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பழைய நாஸ்திக நூற்கள் விஞ்ஞான வளர்ச்சி அடைந்த இந்தக் காலத்திற்குப் பொருந்தாதென்றும் புதிய விஞ்ஞான அபிவுக்கு அவைகள் ஒத்து வராதவைகள் என்றும் சொல்லப்படுகின்றன. இம்மாதிரியாக விஞ்ஞானம் (Science) என்ற பெயரால் செய்யும் மோசடியைவிட மோசமானகாரியம் உலகத்தில் வேறு ஒன்றுமே இல்லை என்று சொல்லுவேன். இந்த போலி (Science) சைன்ஸ் வேஷம்போடுகிறவர்கள் ஒன்றாக கற்றறி

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க

தோழர்கள்
இரத்தினசபாபதி-அன்னபூரணி
அவர்கள் சுற்றுப்பிரயாணம்.

முத்துப்பேட்டையில் 12-12-32 திங்களன்று நடைபெற்ற தோழர்கள் சோமசுந்திரம்—ஷண்பகவல்லி திருமணத்திற்காக தோழர்களான அ. இரத்தினசபாபதி ஆர். அன்னபூரணி ஆகியவர்கள் 11-12-32 ஞாயிறன்று ஈரோட்டிலிருந்து புறப்பட்டு திங்களன்று காலை 10 மணி சுமாருக்கு முத்துப்பேட்டை வந்து சேர்ந்தார்கள். ஸ்டேஷனில், தோழர்கள் எம். தர்மலிங்கம்; கோவிந்தசாமி, கணபதி, சோமசுந்திரம், இராமையா முதலிய பல தோழர்கள். இருவரையும் வரவேற்று அழைத்துச்சென்றார்கள்.

திருமண நிகழ்ச்சி
தோழர். ஆர் அன்னபூரணி தலைமை வகித்தார்.

மறுநாள் 12-12-32 அன்று காலை 7 மணிக்கு தோழர் கணபதி அவர்களின் இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த மணப்பந்தலில் ஏராளமான கூட்டம் கூடியிருந்தது. திருமணத்திற்கு பட்டுக்கோட்டை, திருத்துரைப்பூண்டி, திருவாரூர், பாண்டி இன்னும்பல வெளியூர்களிலிருந்தும், உள்ளூரிலிருந்துமாகப் பல தோழர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

பின்னர் வைபவத்திற்குத் தலைமை வகிக்குமாறு தோழர் ஆர். அன்னபூரணி அவர்களே தோழர் கணபதி பிரரேபிக்க, கோவிந்தசாமி ஆமோதித்தார். தோழர் ஆர். அன்னபூரணி தலைமை வகித்து, சுயமரியாதைத் திருமணத்தின் தத்துவங்களையும், தாலிகட்டுதல், சடங்குகள முதலியவற்றைக் கண்டித்தும் மணமக்களே தங்கள் மணநிகழ்ச்சியை நிகழ்த்திக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். மணமகன் எழுந்து அன்றுமுதல் தோழர் ஷண்பகவல்லியைத்தனது துணைவியாக ஏற்றுக் கொள்வதாயும், தனக்குள்ள எல்லாவற்றிலும் அன்னருக்கு உரிமையுண்டென்றும் கூறி மாலை சூட்டினார். பின்னர் மணமகளின் சார்பாக, மணமகளின் தமையனார் கணபதி அவர்கள் உறுதிமொழிகளை வாசிக்க மணப்பெண் மணமகனுக்கு மாலை சூட்டினார்.

பின்பு, தோழர் அ. இரத்தினசபாபதி அவர்கள், சீர்திருத்தத்தின் அவசியத்தைப்பற்றியும், சிக்கனமுறையையும், இதனால் ஏழைகள் பணக்காரர்கள் என்ற பாகு பாடுகளின் தோற்றம் மறையுமென்றும் சுமார் 1½ மணி நேரம் பேசினார். இறுதியில் தோழர் கணபதி அவர்கள் வந்த பேரு பசாரங்கள் கூற மணநிகழ்ச்சி இனிது முடிவுற்றது.

பின்னர் வெளியூர் தோழர்களின் விருப்பத்தின்படி மணப்பந்தலிலேயே பகல் 10 மணிக்கு மற்றொரு பொதுக்கூட்டம் கூடைபெற்றது. அக்கூட்டத்திற்கு தோழர் அ. இரத்தினசபாபதி தலைமை வகித்தார். தோழர் ஆர். அன்னபூரணி புதிய உலகத்தில் பெண்கள் நிலை என்பது பற்றி 1 மணிநேரம் பேசினார். பின்னர் தலைவர் தனது முடிவுரையில் ரஷியப் பொதுவுடைமைத் திட்டங்களையும், வாலிபர்கள் கடைபிடிக்க வேண்டியவற்றைப் பற்றியும் விரிவாகப்பேசினார்.

பின்னர் பட்டுக்கோட்டை தோழர்களின் விருப்பத்திற்கிணங்க தோழர்கள் இருவரும் மாலை 3மணி வண்டியில் பட்டுக்கோட்டைக்குப் பிரயாணமானார்கள். ஏராளமான தோழர்கள் ஸ்டேஷனுக்கு வந்து வழியனுப்பினார்கள்.

பட்டுக்கோட்டையில் பொதுக்கூட்டம்.

பட்டுக்கோட்டை தியாகராயவாச கசாலையில் திங்களன்று மாலை 5-30 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. ஏராளமான தோழர்கள் விஜயம் செய்திருந்தனர். கூட்டத்திற்கு பட்டுக்கோட்டை கோவாப் ரேடிவ் இன்ஸ்பெக்டர் தோழர் கோமதி அவர்கள் தலைமைவகித்தார்.

தலைவர் தனது முன்னுரை கூறியபின் தோழர் அ. இரத்தினசபாபதியவர்கள் எழுந்து "பொதுவுடைமையும்; இந்திய வாழ்வும்" என்பதுபற்றி 2மணிநேரம் உணர்ச்சியுடன் பேசினார். அதில் ரஷிய மக்களின் வாழ்வையும், அங்குள்ள மதங்களின் நிலைமையையும், கடவுள் என்ற பதம் படும் பாட்டையும் விளக்கமாகக்கூறி இந்தியாவில் மதங்களும், கடவுளுணர்ச்சியும் அடியோடழிய வேண்டுமெனக்குறிப்பிட்டனர். கூட்டத்தில் பரபரப்பும் உற்சாகமும் காணப்பட்டன.

பின்னர் தோழர் ஆர். அன்னபூரணியார், "பெண்மக்களின் இன்றைய அவசியங்கள்" என்பது பற்றி பேசினார். அதில் பெண்களின் தலைமயிரை நீக்குகிப்பதில்கூட மதங்கள் தலையிடுகின்றன வென்றும் மதங்கள் ஒழிந்தால்தான் உண்மை அறிவு கிடைக்கு மென்றும், பெண்களின் சொத்துரிமை சீர்திருத்தத்தின் உயிர் நாடி போன்றதென்றும் மேற்கோள்களுடன் விளக்கினார்.

கடைசியில் தலைவர் தனது முடிவுரையைத் தெளிவாகக் கூறியதும், தோழர். வி. எஸ். டேவிஸ் பி. ஏ. அவர்கள் எழுந்து, தோழர்கள் இரத்தினசபாபதி, அன்னபூரனி ஆகியவர்களின் உண்மை உழைப்பையும், உணர்ச்சியையும் பராட்டி அவர்கள் கூறியபடி "மதங்கள் ஒழிந்தால்தான் நாடு முன்னேறுமென்றும் குறிப்பிட்டு வந்தனோபசாரம் கூற இரவு 9-30 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

மறுநாள் காலை வண்டியில் தோழர்கள் இரத்தினசபாபதி. அன்னபூரணி இருவரும் ஈரோடுக்குப் பிரயாணமானார்கள். வழியிலுள்ள ஸ்டேஷன்களில் சித்தக்காடு தோழர் இராயை, மகமத்ஷரீப் முதலியோர் சந்தித்தனர். அன்றிரவு 4 மணிக்கு ஈரோட்டுத்தோழர்கள் ஈரோடு வந்து சேர்ந்தார்கள் என நமது நிருபர் எழுதுகிறார்.

திருச்சி பானகல் அரசர் தினக்கொண்டாட்டம்.

திருச்சி பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கத்தின் சார்பாகவும், தென்னிந்திய நலஉரிமை சங்க சார்பாகவும் பானகல் அரசர் இறந்த நான்காவது ஆண்டு பூர்த்தி ஞாபகார்த்த தினவிழாவை திருச்சி பீமநகர் கணேஷ்த்தெருவு முனிசிபல் பாடசாலையில் 10-12-32 வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு தோழர் கே. எம். பாலசுப்பரமணியம் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் கூடந்தது. பானகல் படத்தை புஸ்ப மாலைகளால் அலங்கரித்து மேடை மீது வைக்கப்பட்டது; தோழர். டி. பி. வேதாசலம் பி. ஏ. பி. எல். அவர்களும் திருச்சி பார்ப்பனரல்லாத வாலிபர் சங்க உபகாரியதரிசி தோழர் டி. ஆர். பகலகிருஷ்ணன் அவர்களும் பனகால் அரசர் திவ்விய சரித்திரத்தையும் ஜஸ்டிஸ் கக்ஷியின் தலைமை பதவியில் அவர் பொருப்பும் அரசியல் தந்திரத்தையும் பேசி முடிந்த பின் தோழர் சஞ்சீவி அவர்களால் வந்தனோபசாரம் கூற கூட்டம் 5 மணிக்கு இனிது முடிந்தது; என காரியதரிசி எழுதுகிறார்.

வருகை.

ஈரோட்டில் நடைபெறும் வேலைத் திட்டக்கூட்டத்திற்கு தோழர்கள். அ. ராகவன், அ. பொன்னம்பலனார், காளியப்பன், எஸ். குருசாமி, எஸ். குஞ்சிதம், எஸ். கார்த்தம், எஸ். சகுந்தலா முதலியவர்கள் ஈரோடுவந்து இருக்கிறார்கள். மற்றும் சுமார் 200 பேர்களுக்கு மேலாகவே வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

திருச்சியில் தோழர் அழகிரிசாமி.
பலபொதுக்கூட்டங்களில் சொற்பொழிவு.

சென்ற-19-12-32ந்தேதி மாலை திருச்சி பார்ப்பனரல்லாத சங்க ஆதரவில் கூடப்பட்ட பொதுக்கூட்டத்தில் தோழர். கே. வி. அழகர்சாமி, சமூக சீர்திருத்தமும், நம் மக்களும் என்பது பற்றியும், திருச்சி தோழர். மருதநாயகம் அவர்களது துணைவியார் பிற்கடன் முடிப்பின் போது கூடப்பட்ட பொதுக்கூட்டத்தில் 20-12-32ந்தேதி "புரோகிதப்புரட்டு என்பது பற்றியும் பார்ப்பனரல்லாத வாலிபசங்க ஆதரவில் ஸ்ரீரங்கத்தில் கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தில், "அவர்களும் நாமும்" என்ற பொருள் பற்றியும், தோழர். கே. எம். பாலசுப்ரமணியம் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் கூடிய பனகால் லிட்டரரி அண்ட் போர்ட்டிங் சங்க முதலாவது ஆண்டுவிழாக்கூட்டத்தில் "சங்க சீர்திருத்தமும், அரசியல் சீர்திருத்தமும்" என்பது பற்றியும்.

பீமநகர் பார்ப்பனரல்லாத வாலிபர் சங்க ஆதரவில் நகரமண்டபத்தில் கூடியபொதுக்கூட்டத்தில் "தற்காலநிலைமையும், நமது கடமையும்" என்பது பற்றியும், பல பொதுக்கூட்டங்களிலும் பல சொற்பொழிவுகளாற்றினார்.

பின் திருச்சியில் இருந்து சென்னைக்கு சென்று சென்னையில் இருந்து அடுத்தவாரம் ஈரோடு செல்வார்.

ஒரு நிருபர்.

நாடார் மகாஜன சங்கம்
—:0:—
ஜனரல்பாடி மீட்டிங்குக்கு அஜண்டா.

இச்சங்கத்தின் 14வது ஜெனரல் பாடி மீட்டிங் 31.12-32ல் சென்னை வேப்பேரியில் கூடைபெறும். அதசமயம் கீழ்கண்ட விஷயங்கள் யோசிக்கப்படும். 29, 30, 31, 32, வருஷ வேலை ரிப்போர்ட் வாசிததல், கீர்வாகஸ்தர்களை தெரிந்தெடுத்தல், 3 தான்களுக்கு முன்னால் அனுப்பியிருக்கப்பட்ட விஷயம் கவனிக்கப்படும்.

சந்தா பாக்கிகளை உடனே அனுப்பவும். மெம்பர் சர்ட்டிபிக்கேட்டுகளுடன் வரவேண்டுமென்றும் கோரப்படுகிறது. டெலிகேட்டுகள எல்லோரும் ஜனரல்பாடி மீட்டிங்கில் எல்லோரும் கலந்து கொள்ள மெம்பராகும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

W. P. A. S,
A. A. A.
காரியதரிசிகள்.

குடி அரசு.

ஞாயிறு 1932 டிசம்பர் மீ 25-ஆ

வேலைத்திட்டக் கூட்டம்.

——:0:——

இந்த மாதம் 28, 29-தேதி புதன் வியாழக்கிழமைகளில், ஈரோட்டில், சுயமரியாதை இயக்கத்தின் 1933 வருஷத்திய வேலைத் திட்டத்தைப் பற்றியோசிக்க ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக சுயமரியாதை இயக்கத்து பிரமுகர்களும் தீவிர பிரசாரகர்களும் அபிமானிகளும் ஆகவிரும்பவர்களுமான தோழர் பலருக்கு அழைப்பு அனுப்பப் பட்டிருக்கிறது. சில முக்கிய பிரமுகஸ்தர்களுக்கு அழைப்பு வந்து சேராமலோ, அல்லது அனுப்பச் சவறிப்போயோ இருக்கலாம். அவற்றை யெல்லாம் லட்சியம் செய்யாமல் இயக்க அபிமானிகள் உள்பட யாவரும் விஜயம் செய்து ஒரு வேலைத்திட்டம் நிர்ணயிக்க உதவி செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகின்றோம். இது வரை சுயமரியாதை இயக்கம் பெரிதும் பிரசார நிலையிலேயே இருந்து வந்திருக்கிறது என்றாலும், அது தோன்றியது முதல் காலுக்கு கால் முற்போக்கான கொள்கைகளையே படிப்படியாய் வகுத்துக்கொண்டு பிரசாரம் செய்து வந்திருப்பதின் மூலம் பெரிதும் தமிழ்நாட்டு மக்களின் உள்ளத்தில் ஒரு பெரிய புரட்சி உணர்ச்சியை உண்டாக்கி இருப்பதுடன் குறுகிய நோக்கமும் சுயநல பிரதானமும் கொண்டவர்கள் உள்ளத்தில் பெரும் அச்சத்தையும் ஆத்திரத்தையும் உண்டாக்கி வந்திருக்கிறது.

தீவிர முற்போக்குகள் எப்படி கிளறி எந்த தேசத்திலும், எந்த காலத்திலும் சுயநல மக்களுக்கு இவ்விதமான அச்சமும் ஆத்திரமும் தானாய், சிறிது காலம் புத்திமதி சொல்லி தாமாகாய் திரிந்து விட்டு கடைசியாய் உள் நுழைந்து கொள்வது இயல்பே யாகும். ஆனால் உண்மையான சுயநல மக்களின் முற்போக்கிற்கு உழைக்கின்றவர்கள் இவற்றை லட்சியம் செய்யாமல் புது புது கொள்கைகளுடன் மேலே மேலே போய்க் கொண்டிருப்பார்களேயானால் பழைய கொள்கைகள் என்பதை எதிரிகளால் சமாதானமானதாகவும் கருதக் கூடியதாகி, புதுக் கொள்கைகளோடு மாத்திரம் போரிடுபவர்களாக ஆகி விடுவார்கள். அப்படிக்கில்லாவிட்டால் குறிப்பிட்ட கொள்கையைப் பற்றியே விவகாரம் நடத்திக் கொண்டிருக்கையில் நேரிட்டு முயற்சிகளுக்கு முன்னேற்றமென்பதில்லாமல், தேக்க முண்டாய் விடும். ஒரு விஷயத்தைப் பற்றி சரியோ தப்போ என்பதை கவனிக்காமல், எதைச் சொன்னாலும் வட்டிக்குப் போட்டி டியாய் வம்பளத்து வயிறு வளர்ப்பதையே வாழ்க்கையாய்கொண்ட மக்கள் உலகம் எங்கும் இருந்து தான் வருகின்றார்கள். இவர்களுடைய உதவியாருக்கும் எவ்வளவு குறைந்த விலைக்கும் கிடைக்கக் கூடும்.

ஆதலால் முற்போக்கான் புதுக் கொள்கைகளால் சுயநல பங்கமடையக் கூடிய மக்கள் இக்கூட்டத்தாரின் உதவியால் ஒரு சாதாரண விஷயத்திற் கெல்லாம் ஆகாயம் இடிந்து விழப்போவதை தடுக்க வேண்டியவர்கள் போல் மாமாலக் கூப்பாடு போட்டு அங்கு மிங்கும் நிறுத்து பாமர மக்களை ஏமாற்றி ஆகாவதேட அலைவார்கள்.

நிற்க, மக்கள் நலத்தில் சுவலை கொண்டு பொதுக் காரியத்தில் முனைந்திருப்பவர்கள் சிறிதாவது எதாவது ஒரு காரியத்தைச் செய்து சாதிக்க வேண்டும் என்று கருதுவார்களேயானால் அவர்களுக்கு முக்கியமான ஒரு யோக்கியதை இருக்கவேண்டும். அதென்ன வென்றால் இப்படிப்பட்டபோலிக் கூப்பாடுகளுக்கும் கூலி மாரடிப்புகளுக்கும் மனம் கலங்காமல் இருக்க வேண்டியதே யாகும். மற்றும் "நமது கொள்கையைப் பற்றி ஊரார் என்ன நினைப்பார்கள், நம்மைப்பற்றி ஊரார் என்ன பேசுவார்கள்" என்கின்ற விஷயத்தைப்பற்றி எவ்வளவுக்கெவ்வளவு கவனியாமல் யாவர் அலட்சியமாய் இருக்கின்றார்களோ அவர்களே தான் அவ்வளவுக்கவ்வளவு புதிய எண்ணங்களையும், புதிய உணர்ச்சிகளையும், புதிய கொள்கைகளையும் மக்களுக்குள் புகுத்தவும் அதை காரிய அனுபவத்தில் கொண்டு செலுத்தச் செய்யவும் தகுதி உடையவர்கள் ஆவார்கள்.

உதாரணமாகநிர்வாணக் கொள்கையை ஒரு காட்டில் வெற்றிபெற நடத்தவேண்டும் என்று ஒருவன் கருதுவானேயானால் அவன் அக் கொள்கையின் அவசியத்தையும், சரியா தப்பா என்பதையும் கவனிக்கவேண்டியே ஒழிய மற்ற படி இக் கொள்கையை எடுத்துச் சொன்னால் மக்கள் என்ன சொல்லுவார்கள் என்று நினைப்பானேயாகில் அக் கொள்கைக்காரன் அந்த வேலைக்கு தகுதி அற்றவனே ஆவான். நிர்வாணக் கொள்கையைப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தால் பஞ்சாலைத் தொழிலாளி யாபாரிகள் எவ்லோரும் எதிர்பிரசாரத்துக்கு வந்துவிடுவார்கள். ஜவுளி வியாபாரிகள் ஆக்கர்கள் எல்லோரும் விஷமப் பிரசாரத்துக்கு வருவார்கள். இவர்கள் வார்த்தைகளைக் கேட்ட சாதாரண பாமரமக்கள் எல்லோரும் நிர்வாணப் பிரசாரகர்கள்மீது கல்லெடுத்துப் போடவும் வருவார்கள். இவற்றைச் சமாளிக்கவோ அல்லது அதன்பயனை அடையவோ தயாராயிருப்பவர்கள்தான் இந்தப் பிரசாரத்தில் புகவேண்டும். இவர்கள்தான் வெற்றிபெறக்கூடும். அப்படிக்கில்லாமல் "நமது உருவப் படம் மூடர்மிட்டில் பூஜையில் இருக்க வேண்டும்" என்று கருதுகின்றவர்கள் இவ் வேலைகளைச் செய்யச் சிறிதும் தகுதியற்றவர்களேயாவார்கள். ஆதலால் தனக்குள் உறுதியும் அதனால் எற்படும் பலனை அடையக்க துணிவும் உள்ளவர்களால்தான் பயன்படத் தக்க மாறுதல்களை உண்டாக்கமுடியும் என்றும் அப்படிப்பட்டவர்களால் தான் உலகில் தலைகீழான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் எடுத்துக் காட்டுவதற்காக யே இவைகள் குறிப்பிட்டோம்.

நிற்க, 1933 வது த்துக்கு என்ன நாம் வகுக்கப் போகும் திட்டங்களில் பல பொதுஜனங்கள் என்பவர்களும் அரசாங்கத்தார் என்பவர்களும் குற்றங் கூறக் கூடியதாகவும் தற்மமாய்க் கருதக் கூடியதாகவும் இருக்கலாம். ஆனாலும் அவ்வியக்கத்தில் அத் திட்டங்களில் நம்பிக்கையும் பற்றும் கொண்டவர்களும், முதலாவதாக இத்திட்டங்களை வெளியிட்டால் ஜனங்கள் என்ன சொல்லுவார்கள். அரசாங்கத்தார் என்ன சொல்வார்கள் என்பதை மறந்து இது சரியா, தப்பா அவசியமா அவசியமில்லையா என்பதைத்தான் போகிக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம். பொதுஜன அபிப்பிராயம் எனபதைப் எப்படி லட்சியம் செய்யக்கூடாது என்று சொல்லுகின்றோமா அப்படித்தான் சர்க்கார் (அரசாங்கத்தார்) என்ன சொல்லுவார்கள்—என்ன செய்வார்கள் என்பதையும் லட்சியம் செய்யக் கூடாது என்று தெரிவித்துக் கொள்ளுகின்றோம். பொது ஜனங்களோ பாமரர்கள்—மூடநம்பிக்கையில் பற்றுக்கொண்டவர்கள் பகுத்தறிவு தடைபடுத்தப்பட்டவர்கள், சர்க்கார் என்பதோ சுயநலமே உருவாய் கொண்ட முதலாளித் தன்மையும் எஜமானத் தன்மையும் கொண்டது. அதாவது இந்த இரண்டு பிரிவும் முதலாளி (செல்வவான்கள்) களாலும் சோம்பேரி (பாடுபடுபவர்கள்) களாலும் நடத்தப் படுவனவாகும். மேல்கண்ட செல்வமும் பார்ப்பனீயமும் மதம் அரசாங்கம் என்னும் சாதனங்களாலேயே காக்கப்படுவதாகும். ஆகவே இவற்றைக் கொண்டு சுலபத்தில் பிரிக்க முடியாத அப்பெரும் ஆதரவும் கொண்டவைகள் எனவே பொதுஜனங்களாலும் சர்க்காராலும் செல்வவான்களுக்கும் சோம்பேரிகளுக்கும் விரோதத்தை விளைவிக்கக்கூடிய எந்தக் கொள்கைகளையும் எதிர்த்தே தீருவார்கள். ஆதலால் இவ் விரண்டு வகை எதிர்ப்புக்கும் தயாராய் இருந்து தான் நாம் நமது திட்டங்களை வகுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். தீவிரமான அவசியமான வேலைத் திட்டம் வகுக்க கருதும் தோழர்கள் இந்த இரண்டு எதிர்ப்பையும் சமாளிக்க உறுதி கொண்டு வந்தால் தான் சரியான திட்டங்களை வகுக்க முடியும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இப்பொழுது இரண்டு வகை திட்டங்கள் தயாரிக்கத் தகுந்து வருவதற்காக சில தோழர்களால் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. ஒன்று சுயமரியாதை சமதர்மக் கட்சித் திட்டம் என்னும் பேராலும், மற்றொன்று சுயமரியாதை கட்சி இது வரையில் செய்து வந்தது போலவே பிரசாரத்தின் மூலமாக பல துறையிலும் சீர்திருத்தங்கள் செய்து மக்களுக்கு உலக ஒற்றுமையையும் பகுத்தறிவையும் அன்பையும் உண்டாக்குவது என்பது. இரண்டைப்பற்றியும் சுருக்கமாக விளக்க வேண்டுமானால் முன்னையது சில கொள்கைகளை வகுத்து அதை நிறை வேற்ற சட்ட சபை முதலிய அரசியல் பொது ஸ்தாபனங்களைக் கைப்பற்றி அதன்மூலம் நடத்துவிப்பது என்பது. பின்னையது அரசியல் ஸ்தாபனங்களை லட்சியம் செய்யாமல் மக்களிடை பல கொள்கைகளை பிரசாரம் செய்து கொண்டே உலகப் புரட்சியை

சுயமரியாதை இயக்க சமதர்மக் கட்சியாரின் உத்தேச திட்டம்.

(தோழர் சிங்காரவேலு அவர்களால் அனுப்பப்பட்டது)

சுயமரியாதை இயக்கமானது தென் இந்தியாவில் சென்ற 7, 8 வருஷ காலமாக பாமர மக்களிடை ஏராளமாய் புதைத்து கிடந்த ஜாதி மதம் முதலியவைகளைப் பற்றிய குருட்டு நம்பிக்கைகள் மூடப் பழக்க வழக்கங்கள் ஆகியவைகளைப் பற்றியும், பொருளாதாரத் தன்மையின் கீழ் நிலையைப் பற்றியும் செய்து வந்த புரட்சி பிரசாரத்தின் பலனாய் ஒரு பெருத்த உணர்ச்சியைக் கிளப்பி விட்டிருப்பதாலும்

பகுத்தறிவுக்கு ஏற்காத முறையில் நடை பெற்று வரும் மேல் கண்ட பழக்க வழக்க முறைகளை சட்ட மூலமாக வன்றி வேறு வழியில் ஒழிப்பது என்பது முடியாது என்கின்ற அபிப்பிராயம் நாளுக்கு நாள் பலப்பட்டு வருவதாலும்,

பாமர மக்களை பல அரசியல் ஸ்தாபனங்களும் மத ஸ்தாபனங்களும், சமூக கட்டுப்பாடுகளும் அந்தந்த விஷயங்களில் அடக்கியும், பொருளாதாரத் துறையில் ஒடுக்கியும் வைப்பதற்கு சாதனமாக அரசியல் ஸ்தாபனங்களை உபயோகப் படுத்தப் பட்டு வருகிறது என்பது ஆக்ஷேபிக்க முடியாத உண்மையாய் இருப்பதாலும்

கட்டமேஜை மகாநாட்டின் பயனும் இந்து முஸ்லீம் மகாநாடுகளாலும் செய்யப் பட்ட முடிவுகளானது பொதுநன்மைக்கு என்று ஏற்படுத்தப்படுகின்ற வசதிகள் தொழில் முறைகள் ஆகியவற்றின் பயன் எல்லாம் தனிப்பட்ட மனிதர்களையே சேரும்படியான மாதிரியில், அதாவது தனிப்பட்ட மனிதர்கள் முதல் போட்டு, அந்த லாபம் முழுவதும் தனிப்பட்ட நபர்களை அடையும்படியான வழிக்கே ஆதாரமாயிருப்பதோடு மக்களின் பகுத்தறிவு வளர்ச்சிக்கு நாசத்தை உண்டாக்கும் தொடுமையான மதக் கோட்பாடுகளுக்கும் மனிதத் தன்மைக்கு முரணான ஜாதி வித்தியாசங்களுக்கும் ஆக்கமளிப்பதாய் இருப்பதாலும்,

சுயமரியாதை இயக்கத்தாருக்குள் சமதர்ம (Socialist Party) கட்சி என்பதாக ஒரு அரசியல் பிரிவை ஏற்படுத்தி, அதற்கு அடியிற்கண்ட திட்டத்தை வகுத்து, அதன் மூலம் பரிகாரம் தேடுவது என்று தீர்மானிக்கப் படுகிறது.

1. பொது ஜன சவுகரியங்களுக்கு ஏற்பட்ட சாதனங்களை தனிப்பட்ட மனிதர்கள் அனுபவிப்பதென்பதற்கும் ஜாதிமத சம்பந்தமான கொடுமைகளுக்கும் பாதுகாப்புகளாய் இருக்கும் அறிவுக்கு ஒவ்வா முறைகளை ரத்து செய்ய வேண்டும்.

பாமர ஜனங்களை அவர்களது பொருளாதாரக் கொடுமையில் இருந்தும், மூடப் பழக்க வழக்கங்களில் இருந்தும், ஜாதி மதக்கொடுமையில் இருந்தும் விடுவித்து சுதந்திர மனிதர்கள் ஆக்குவதற்கும், பொது ஜன அபிவிருத்திற்கு என்று ஏற்படுத்தப்படுகிற தொழில் முறைகள் போக்குவரத்து சாதனங்கள் ஆயுதங்களின் நிர்வாகத்தையும் அதன் இலாபத்தையும் தனிப்பட்ட மனிதர்கள் அடையாமலிருப்பதற்கும் வேண்டிய காரியங்களை அரசியல் ஸ்தாபனங்களின்மூலமாகச்செய்யவேண்டும்

2. எல்லாச்சட்டசபைமுனிசிபல் தாலூக்கா ஜில்லா சபை ஆகியவற்றின் தேர்தலுக்கு வயது வந்த யாவருக்கும் ஓட்டுரிமை ஏற்படும்படி செய்யவேண்டும். தனிப்பட்ட தொழிற் சாலைகள், ரயில், கப்பல் முதலிய வைகளில் தொழிலாளிகளுக்கு எப்பொழுதும் தொழில் இருப்பதற்கு ஒரு ஜவாப்தாரித்தனத்தையும் அவர்களுடைய நல்வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியத்தை நிர்ணயப்படுத்தி அதற்குஒரு உறுதிப்பாட்டையும்செய்வதற்கு ஏற்பாடுசெய்ய வேண்டும்,

4. நில சொந்தக்காரர்களாயில்லாமல் விவசாயத்தில் ஈடுபட்ட தொழிலாளிகளுக்கு வெள்ளாமையில் ஒரு ஞாயமான பங்குவிகிதம் கிடைக்க வேண்டும்.

5. கோவில் பிரார்த்தனை இடங்கள் முதலிய மத ஸ்தாபனங்களின் சொத்துக்கள், வரும்படிகள் ஆகிவைகளைப் பொது ஜனங்களின் தொழில், கல்வி, சுகாதாரம், வீடுவசதி அனுதைப் பிள்ளைகள் விடுதி ஆகியவைகளுக்கு பயன்படுத்த அனுமதி பெறவேண்டும்.

6. இந்திய சமூகத்தில் ஜாதிமத பிரிவு முதலியவைகளைக் குறிக்கக்கூடிய குறிப்புகள் எதையும் எப்பொழுதும் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டுமென்பது. மற்றும் இந்து இஸ்லாம் முதலிய மகாநாடுகளில் தனித்தனியே கடைப்பிடிக்கப்படலாம் என்பதை. ஆகவே இந்த விஷயங்கள் எல்லாம் மற்றுப் பொறுப்புடன் ஆலோசிக்கப்படப்பட்டு ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியமாகும்.

ஆதலால் உண்மை விடுதலையிலும் உண்மை சமத்துவத்திலும் பற்றுக்கொண்ட சுயமரியாதை தோழர்கள் அவசியம் விஜயம் செய்து கூட்டத்தின் உத்தேசத்தை நிறைவேறுமாறு கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

I.

ஆதாரங்களில்(ரிகார்ட்டுகளிலிருந்து) எடுத்துவிடுவதற்கும் அம்மாதிரிப் பட்டம் உடையவர்களைப் பொதுவேலைகளில் இடம்பெறுமல் இருக்கும் படி செய்வதற்கும் அனுமதி பெறுதல்.

7. முனிசிபாலிடி முதலிய ஸ்தாபனங்களின் மூலமாகவே போக்குவரவு சாதன வசதி, வீட்டு வசதி, பால்வசதி, வைத்தியவசதி, முதலியவைகள் நடைபெறும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

8. இவைகளை நிறைவேற்ற சட்டசபை முனிசிபாலிட்டி முதலிய ஜனப் பிரதிஸ்தாபனங்களுக்கு மேல் கண்ட கட்சியினர் பேரால் அபேக்ஷகர்களை நிறுத்தவேண்டும்.

9. கட்சி அபேட்சகர்கள் மேல் கண்ட திட்டங்களுக்கு உறுதிகூறி கையெழுத்திடவேண்டும்.

10. மேல்கண்ட சட்டங்கள், சீர்திருத்தங்கள் முதலியவைகளை எல்லாம் சட்டசபைப் பிரவேசம், மூலம் பிரசங்கமூலம் சொல்லுவதன் மூலம், பத்திரிகைத் துண்டுப்பிரசுரம் முதலியவைகள் மூலம் சட்டத்தை அனுசரித்துச் செய்யவேண்டியது.

சுயமரியாதைக் கட்சியின் அடிப்படையான கொள்கை.

(மற்றொரு தோழரால் அனுப்பப்பட்டது.)

II.

1. பிரிட்டிஷ் முதலிய எக்காலித முதலாளித்தன்மை கொண்டஆட்சியிலிருக்கும் இந்தியாவை பூரண விடுதலை அடையச் செய்வது.

2. தேசத்தின் பேரால் கொடுக்கப்பட வேண்டிய கடன்களை யெல்லாம் ரத்து செயவது.

3. எல்லா தொழிற்சாலைகளையும், ரயில்வேக்களையும். பாங்கிகளையும் கப்பல் படகு நீர் வழி போக்குவரத்து சாதனங்களையும் பொது மக்களுக்கு உரிமையாக்குவது.

4. எந்த விதமான பிரதிப்பிரயோஜனமும் கொடுபடாமல் தேசத்தில் உள்ள எல்லா விளைய நிலங்களையும், காடுகளையும் மற்ற ஸ்தாவர சொத்துக்களையும் பொது ஜனங்களுக்கு உரிமையாக்குவது.

5. குடியானவர்களும் தொழிலாளிகளும் வேலை தேவிக்காரர்களிடம் பட்டிருக்கும் கடன்களையெல்லாம் (கேன்சில்)செல்லுபடியற்றதாக ஆக்கிரத்து செய்து விடுவது. அடிமை ஒப்பந்தங்களை ரத்து செய்து விடுவது.

6. சுதேச சமஸ்தானங்கள் என்பனைகளையெல்லாம் கலைத்து இந்தியா முழுதையும் தொழிலாளிகள் குடியானவர்கள், கூலி வேலைக்காரர்கள் என்பவர்களுடைய கோரிக்கையை ஆட்சிக்கு கொண்டு வருவது.

7. தொழில்செய்பவர்கள் 7 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யக் கூடாது என்பதுடன் அவர்களுடைய வாழ்க்கை நிலை உயர்த்தப்படுவது. தொழிலாளிகளுக்குகூலியை உயர்த்தி தொழில் இல்லாமல் இருக்கின்றவர்களை சர்க்கார் போஷிக்கும் படி செய்வது. என்பவைகள் சு. ம. இயக்கத்தின் அடிப்படையான லட்சியங்களாய் இருக்க வேண்டும்.

தோழர் சௌந்தரராஜலு வெற்றி.

மன்னார்குடி தாலூகா போர்டுக்கு கோபாலசமுத்திரம் சர்க்கிளுக்கு சுயமரியாதை இயக்கத் தோழர் சௌந்தரராஜலு அவர்களும், தோழர் சுந்தரராஜலு அவர்களும் நின்றார்கள். அதில் தோழர் சொந்தராஜலு அவர்களை அதிக ஓட்டுகளால் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

ஒரு நிருபர்

எல்லப்பசெட்டியார் வெற்றி.

சேலம் ஜில்லாபோர்டு தலைவர் தேர்தல் சென்ற 20-12-32ந்தேதி நடைபெற்றது. அப்பதவிக்கு தோழர் திவான்பகதூர் எஸ். எல்லப்பசெட்டியார் எம். எல். சி. அவர்களும், தோழர் ராதாபாய் சுப்பராயன் பி. ஏ. அவர்களும் நின்றார்கள். தோழர் எல்லப்பசெட்டியாருக்கு 30 ஓட்டுகளும், தோழர் ராதாபாய் சுப்பராயலுக்கு 20 ஓட்டுகளும் கிடைத்ததால் தோழர் எல்லப்பசெட்டியாரே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஒரு நிருபர்.

மதுரை நாடார் மஹாஜன சங்க நடவடிக்கை.

16—12—32ல் சங்க ஆபீசில் நடந்த கௌன்சில் நடவடிக்கை அக்டோபர் நவம்பர் மாசம் கணக்கு ஒப்புக்கொண்டது. டிசம்பர் மாதம் 30, 31ந்தேதி நடக்கும் மகாநாட்டுக்கு 135 கனவான்கள் விஷய ஆலோசனைக்கமிட்டிக்கு நியமிக்கப் பட்டார்கள். இஷ்டப்பட்டவர்கள் இவர்களை சேர்த்துக்கொள்ள இக்கமிட்டிக்கு அதிகாரம்கொடுப்பது என்றும் ஜனரல் மீட்டிங்கு அஜண்டா ஒப்புக்கொண்டது. ஆடிட்டர் ரிப்போர்ட் காரியதரிசிகள் சமாதானம் ஒப்புக்கொண்டது. தூ. நா. பாங்கு ஸ்காலர்ஷியு கமிட்டி ரிப்போர்ட்ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன்

ஏ. ஏ. ஆறுமுகம்,

காரியதரிசிகள்.

பல்லாவரத்தில் சுயமரியாதைப் பிரசாரம்.

சென்னை பல்லாவரம் ரயில்வே ஸ்டேஷன் அருகாமையிலுள்ள மலையடிவாரத்தில் 18-12-32 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு தோழர். எம். கங்காதார் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள்.

அது சமயம் தோழர்கள், அ. பொன்னம்பலம், எஸ். குருசாமி பி. ஏ., கே. முத்துச்சாமி வல்லத்தரசு பி. ஏ. பி. எல்., எஸ். வி. லிங்கம் ஆகியவர்கள் "சமூக சீர்திருத்தம்" "சுயமரியாதை இயக்கம்" சமதர்மம், என்பது பற்றி விரிவுரை நிகழ்த்தினர்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பின்னர் கூட்டம் இனிது முடிவுற்றது. என்று பல்லாவரம் இராப்பள்ளிக் கழகத்து காரியதரிசி தோழர் பி. பாலகிருஷ்ணன் அவர்கள் அறிவிக்கிறார்.

சமதர்மப்பிரசாரம்.

கண்டனூர்சிவன்கோவில்சோமவாரக் காட்சிக்காக 12-12-32- திங்கட் கிழமை இரவு பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள் அதுசமயம் சிவன்கோவில் முன்பாக ஒருபொதுக் கூட்டம் இரவு8மணிக்குநடைபெற்றது.

தோழர்கள் ப. சிவானந்தம், அ. டெண்ணம்பலம், கணபதி, ஆகியவர்கள் தீண்டாமை விலக்கு" "சமதர்மம் "புரட்சி" என்பது பற்றி விரிவுரை நிகழ்த்தினர்கள். பெருந்திரளான மக்கள் கூடி மிகஆர்வத்தோடு கேட்டார்கள் இரவு12 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

தாலூகா போர்டு தேர்தல்.

சுயமரியாதைத்தோழர் வெற்றி.

திருத்துரைப்பூண்டி தாலூகா போர்டு தேர்தலில், முத்துப்பேட்டை சர்கிளுக்கு நமதியக்கத் தோழர் எம். தருமலிங்கம் அவர்கள் ஓர் அபேட்சகராய் நின்றார். வைதிக இந்துமுஸ்லீம்கள் சூட்சி செய்தும், சுயமரியாதைக்காரனுக்கு ஓட் போடாதே என்று எதிர்ப் பிரசாரம் செய்தும் இந்துமுஸ்லீம் சுயமரியாதை வாலிபர்களது ஊக்கத்தாலும், உழைப்பாலும் தோழர் தருமலிங்கம் அவர்கள் வெற்றி பெற்றது பாராட்டத்தகுதியதாகும். அவரது முழு கவனமும் சுயமரியாதை இயக்க வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலுமே செலுத்தப்படுமென்று நம்புகிறேன்.

(ஒரு நிருபர்)

ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா போர்டு.

தோழர். சர்க்கரையப்பன் வெற்றி.

இத்தாலூகா போர்டின் மெம்பர்கள் எலக்ஷன் 26-11-32ல் நடைபெற்றது. இத்தேர்தலில் காரிசல் குளம்பதிவரழும்சமதர்மஇயக்கத்தைச் சேர்ந்த தோழர் சர்க்கரையப்பன் அவர்கள் ஓர் அபேட்சகராவர் இவருக்குப் போட்டியாய் நின்றவரிருவருள் எலக்ஷனுக்கு முதற்றினம் வரையிலும் இந்த போர்டின் டெலிபிரசிடெண்டாக விருந்தவரும், இந்நகர் ஹிந்து ஹைஸ்கூலின் தலைமை ஆசிரியருமான தோழர் கிருஷ்ணய்யங்காரும் வாழைக்குளம் கிராமம் அஸிஸ்டெண்டு கர்ணம் தோழர் பி. எம் பொன்னையா அவர்களுமாவர். பின்னைய சகோதரரிருவரும் தோழர் சர்க்கரையப்பன் அவர்களுக்கு விரோதமாய்ப் போட்டியிட்டு முயற்சித்த முயற்சிகள் பயனிலா தொழியவே சமதர்மத்தின் வெற்றியின்றி குறியாய், தோழர் சர்க்கரையப்பன் அவர்கள் வெற்றி பெற்றனர். என ஒரு நிருபர் எழுதுகிறார்.

திருச்செங்கோடு வாலிப சகவாச சங்கம்.

—0—

11-12-32.ல ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு வாலிப சகவாச சங்கத்தினரின் பொதுக் கூட்டம் ஒன்று டி. கே. ஜி. சம்பந்தம் அவர்களின் தலைமையின் கீழ் கூட்டப்பட்டது. அவ்வமயம் "பெண்கள் சுதந்திரம்" என்னும் பொருள்பற்றி தோழர்கள் ருக்மம், டி. ஏ. சங்கரலிங்கம், பழனிச்சாமு, நடைசு முதலானவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். பின்பு தலைவர் முடிவுரையுடனும் சங்கத்தலைவரால் சங்கத்தின் சார்பாக வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் 6-30 மணிக்கு இனிது கலைந்தது எனக் காரியதரிசி எருதுகிறார்.

ஷை சங்கத்தின் வாராந்திரக் கூட்டமொன்று 18-12-32 ப் தேதி ஞாயரன்று மாலை 4-30 மணிக்கு தோழர் ஜிவகாருண்யம் அவர்களின் தலைமையின் கீழ் கூடியது. "தீண்டாமை"யும் "மேல் நாடும் கீழ்நாடும்" என்னும்பொருள்பற்றி தோழர்கள் டி. ஏ. சங்கரலிங்கம், சி. கே. வரதராஜுலு, ருக்மம் முதலியவர்கள் அருமையாக விரிவுரையாற்றினர். கூடடம் இரவு 7-மனிக்கு இனிது கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

வேலைத்திட்டக் கூட்டம்.

நாளது 28, 29—12—32-ந் தேதிகளில் ஈரோட்டில் சுயமரியாதை இயக்க வேலைத் திட்டக் கூட்டம் கூடும். தோழர்கள் விஜயம் செய்யக் கோருகிறேன்.

ஈ. வெ. ரா.

சென்னை சுயமரியாதை இளைஞர்மன்றம்.

ஷை மன்றத்தின் சார்பாக அங்கத்தினர்களின் வாராந்திரக்கூட்டம் முதல் தடவையாக 18-12-32 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அது சமயம் தோழர் எல். ராமசாமி தலைமை வகித்தார். தோழர் தர்மதீரர் "சுயமரியாதையும் அதன் நோக்கமும்" என்ற விஷயத்தைப்பற்றி சொற்பொழிவாற்றினர். ஞாயிறு தோறும் மாலை 2-மணிக்கு கூட்டம் நடைபெறும்என காரியதரிசி எழுதுகிறார்.

புதுவருஷ காலண்டர்.

காஞ்சிபுரம் குமரன் பிரசிலிருந்து தமிழ்—இங்கிலீஷ் தேதி ஆபீஸ் காலண்டர்கள் வரப்பெற்றோம். நல்ல காகிதத்தில் அழகாக, ஆபீஸ் உபயோகத்திற்கு தகுந்த விதமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது.

விலாசம்:—

"குமரன் பிரஸ்"
காஞ்சிபுரம்.

கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்.

18—12—32ந்தேதி ஞாயிற்றுக் கிழமை மாலை 7-30 மணிக்கு ஷை சங்கத்ட்ன் வாராந்திரக்கூட்டமொன்று தோழர் என். கே- கஸ்தூரி அவர்கள் தலைமையில் கூடியது. தோழர் ராம்தாஸ் அவர்கள் மிக இனிமையாகச் சுயமரியாதைக் கீதங்கள் பாடியாஞர். பின்னர் தோழர் பி. இரங்கசாமி அவர்கள் "உலகத் தேவை" என்னும் பொருள்பற்றி மிக உருக்கமானதோர் சொற்பொழிவாற்றினர். அவரை யாதரித்து தோழர்கள் எச். எல். முனிசாமி, ஆர். கிஸன் ஆகியவர்கள் பேசினர்கள். பிறகு தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது இரவு 9-மணிக்கு கலைந்தது என காரியதரிசி எழுதுகிறார்.

"வெடி குண்டு"

தனிப்பிரதி விலை அரையணை.

ஏஜண்டுகளுக்கு

மேல்நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சி கட்டுரைகளும், சமூக சமுதாய அரசியல் செய்திகளுடனும் அச்சமற்ற ஆணித்தரமான அபிப்பராயங்களையும் கொண்டு கிரவுண் 1-க்கு 2 சைசில் விச்சித்திர படங்கள் போட்டு 12 பக்கம், ரேப்பருடன் பிரதி ஞாயிறுதோறும் மதுரையிலிருந்து வெளியிடும் "வெடி குண்டு" என்னும் தமிழ் வாரப்பத்திரிக்கைக்கு எல்லாவிடங்களிலும் விற்பதற்கு ஏஜண்டுகள் தேவை. தனிப்பிரதி விலை அரையணை. பிரதி ஒன்றுக்கு இரண்டு பைசா கமிஷன் கொடுக்கப்படும். எத்தனை பிரதிகள் தேவையோ அத்தனை பிரதிகளின் நான்கு வாரத்திய தொகையை முன்பணமாக அனுப்பப்படாத ஏஜண்டுகளை பதிவு செய்து கொள்ளப்பட மாட்டாது. முன் பணம் வருடசந்தா ரூ இரண்டு ஆறு மாதத்திற்கு ஒன்னேகால். வெளி நாடு வருஷசந்தா மூன்று.

A. S. ஆனந்தம்
மானேஜிங் எடிட்டர்
காரியாலயம் தெற்கு வாசல்
மதுரை.

ANANGARANGABATIKA.

(Enjoyment Pill)

DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.

Complete satisfaction guarenteed. Money refunded in case of tailure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

"SAILASRAM" (K)
Chandanpur,
(Khulna) E. B. R.

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

மூடர்களாய் இருக்கவேண்டும், அல்லது மார்க்ஸ் கொள்கைகள் என்ன என்பதைக் கொஞ்சமும் அறியாதவர்களாய் இருக்கவேண்டும். பதினெட்டாவது நூற்றாண்டில் விளங்கிய புரட்சிக்கார ஞானிகர்கள் எழுதிய நூற்களில் அனேகபாகங்களில் விஞ்ஞான அறிவுக்கு ஒத்துவராத கொச்சை பேச்சுகள் அனேகம் அடங்கி இருக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அந்த நூற்களை வெளியிடுகின்றவர்கள் தற்கால அறிவுக்கு ஒத்துவராதவைகளை நீக்கியும், பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு மதத்தைக் கண்டிக்கும் வழியில் (Science) சைன்சு இன்ன இன்ன வழியில் முன்னேறிச் சென்றிருக்கின்றது, என்று விளக்கியும் அதற்குத் தகுந்த முறையில் நவீன முறையில் சுட்டிக் காட்டும் குறிப்புகளைச் சேர்த்தும் வெளியிடுவதை யாரும் வேண்டாம் என்று சொல்ல வரவில்லை. கோடிக்கணக்கான மக்கள் (முக்கியமாய் விவசாயிகளும் வேலாளர்களும்) இல்லாரைக் கைத்தொழில்களும் தற்கால சமூக அமைப்பில் எழுதப் படிக்கத் தெரியாமல் மூடப் பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள். இவர்கள் இந்த அறியாமையில் இருந்து தப்பவேண்டுமானால் மார்க்ஸ் வகுத்தமாதிரிதான் படித்தாகவேண்டுமென்று நிர்ணயப் பதானது மார்க்ஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்யக்கூடிய பிசகுகளில் ஒன்று. பொதுமக்களுக்கு நாஸ்திகப் பிரசாரத்தில் உள்ள பல்வேறுவிதமான இரகசியத் தத்துவங்களையும் அவர்கள் அறியும்படி செய்யவேண்டும். பொதுஜனங்கள் நம் கொள்கைகளில் பற்றுக்கொள்ளவும் அவர்கள் அழுந்திக்கிடக்கும் மதம் என்னும் மயக்கத்திலிருந்து தெளிவுபட்டு எழுந்திருக்கவும் அவர்களின் சகல உருப்புகளுகும் பலம் ஏற்பட்டு தாகுகளாக நிலை நின்று நடக்கவும் செய்ய எந்த எந்த வழிகளில் அவர்களை அணுகமுடியுமோ அந்தந்த வழிகளில் எல்லாம் நாம் அவர்களை அணுக முயலவேண்டும்.

பழய நாஸ்த்திக ஆதாரங்கள்.

பதினெட்டாவது நூற்றாண்டில் பழைய நாஸ்திகர்களால் ஆக்கப்பட்ட நூற்களானது குசுகுசுமாகவும் கெட்டிக்காரத்தனமாகவும் எழுதப்பட்டு இருப்பதுடன் அந்தக் காலத்துப் பாதிரிகளின் சுயநலச் செய்கைகளை வெகு சாதுரியமாகவும் வெளிப்படையாகவும் தாக்குகின்றன. தற்காலத்தில் நம்முடைய கட்சியார் எழுதுகின்ற நூற்களில் மார்க்சுடைய வார்த்தைகளையே திருப்பித் திருப்பி பலமாதிரியாக அடிக்கி ருசியும் வேகமும் இல்லாமல் இருப்பதைவிட உண்மைகளை நல்ல திருஷ்டாந்தங்களுடன் எடுத்துக் காட்ட முடியாத மாதிரியில் எழுதப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி நூற்களை தற்காலத்தில் பெரிதும் எற்பட்டு அவைகளின்மூலம் மார்க்சினுடைய கொள்கைகள்தீதுண்டு போகின்றன. ஆகையால் இந்த நவீன நூற்களை விட பழைய நூற்களை பொது ஜனங்களை மதம் என்னும் நித்திரையிலிருந்து எழுப்புவதற்கு ஆதார மடங்கு உபயோகமுள்ளவைகளாகும் மார்க்ஸ் ஏஞ்சல்ஸ் இவர்கள் எழுதிய முக்கிய நூற்களை எல்லாம் மொழி பெயர்த்து விட்டோம். (இது ரஷியாவைப் பொறுத்துச் சொன்னது. மொ-ர்) பழய நாஸ்திகத்திலும் பழய பிரகிருதி வாதத்திலும் மார்க்ஸ் ஏஞ்சல்ஸ் உண்டாக்கிய மாருதல்கள் வெளிப்படுத்தப் படாமல் போய் விடுமோ என்று யாரும் பயப்பட வேண்டியதில்லை. மார்க்ஸ்சைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் என்ற பெயரால் மார்க்ஸ் கொள்கைகளை சிதைத்து வருகிற கூட்டத்தார் அடிக்கடி மறந்து போகும் முக்கிய காரியம் என்ன வென்றால் முன்னுக்கு வராத பொது மக்களை கிளப்பி மதம் என்னும் விஷயத்தில் தங்கள் அறிவைச் செலுத்தி ஆராய்ச்சி செய்யத் தூண்ட வேண்டிய காரியத்தைச் செய்து விடுகிறார்கள்.

இனி நவீன விஞ்ஞான அறிவாளிகளின் பிரதிநிதிகளாய் மத ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறவர்களின் செய்கைகளை சற்று கவனிப்போம். படித்த முதலாளிகளுக்கு முதலாளிகளாய் விளங்கும் இந்தக் கூட்டத்தார் மதப் பழக்கங்களை கண்டிக்கும் போது கூடவே தங்கள் சொந்த சரக்குகளை கொஞ்சம் சேர்த்து விடுகிறார்கள். இதிலிருந்து அவர்கள் பணக்கார வகுப்புக்கு அடிமைப் பட்ட அபிப்பிராயங்கள் கொண்டவர்கள் என்பதும் அவர் "சன்னது பெற்ற பாதிரிகள் கூலிகளாய்" விளங்குகிறார்கள் என்பதும் உடனே புலப்படுகின்றன.

இரண்டு உதாரணங்கள்.

1918-ம் வருஷத்தில் R. J. Wipper என்பவர் "கிறிஸ்து மத எழுச்சி" என்று ஒரு புஸ்தகம் வெளியிட்டார் இது மாஸ்கோவில் பாரோஸ் கம்பெனியாரால் வெளிப்படுத்தப் பட்டது இந்த புஸ்தகத்தில் நவீன விஞ்ஞானத்தை சுருக்கக் கூறிய புஸ்தகாதிபர் சோவில் ஒரு அரசியல் ஸ்தாபனமாக இருந்து கொண்டு பொது மக்களிடம் மூடக் கொள்கைகளையும் குருட்டு நம்பிக்கைகளையும் பெருக்கி வருவதை பலமாய் கண்டிக்காமல், அவைகளை யெல்லாம் மழுப்பி விட்டு தான் பிரகிருதி வாதம், ஆத்ம வாதம் என்னும் இரண்டு அறிந்த வாதங்களிலும் ஈடுபடவில்லை என்று சொல்லிக் கொண்டு பரிகசிக்கத் தக்க வண்ணம் பிற்போக்காளர்கள் போல் பெருமை பாராட்டிக் கொள்ளுகிறார். இவரது செய்கையின் அருத்தம் என்ன வென்றால் தொழிலாளர்களை கொள்ளையடித்து லாபத்தை நிரட்டி, கோடிக் கணக்கான பொருளை மத அபிவிருத்திக்கு என செலவழிக்கும் பணக்கார வர்க்கத்திற்கு தான் அடிமை என்பதை இந்த நூலாசிரியர் காட்டிக் கொண்டதேயாகும்.

கிறிஸ்த்து இருந்ததில்லை.

ஜர்மனியில் பிரகிருதி பெற்ற ஆதர் டிரியூஸ் (Arther drews) என்னும் ஆசிரியர் "கிருஸ்து கட்டுக்கதை என்னும் நூலில் மதக் கொள்கைகளையும் மத கட்டுக் கதைகளையும் எதிர்த்து வாதித்து, சரித்திர ஆராய்ச்சிப்படி கிருஸ்து என்று ஒருவரும் இருந்ததில்லை என்று நன்றாய் ஸ்தாபிக்கிறார். ஆனால் புஸ்தகக் கடைமிலோ மதம் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறார். என்றாலும் பழய மதம் அப்படியே இருக்க வேண்டும் என்று மாத்திரம் சொல்ல வில்லை. அதனுடைய குற்றங்களைக் களைந்து, பரிசுத்தப் படுத்தி அதற்குப் புத்துயிர் அளித்து "நாளுக்கு நாள் பெருகிவரும் விஞ்ஞான அறிவை எதிர்த்து" சமாளிக்கக் கூடிய மதம் என்று சொல்லுகிறார். (இது 1910-ம் வருஷத்திய 4-வது ஜர்மன் பதிப்பு 23-வது பக்கம்) இதன் அருத்தம் என்ன வென்றால் இவர் நேரிடையாக வேண்டுமென்று கொள்ளைக்காரருக்கு உதவி செய்து பழய அழுகிப் போன மதக் கொள்கைகளை —புது மாதிரியில் மோசடியான வெறுக்கத்தக்க மதக் கொள்கைகளை புகுத்த வெளிப்படையாக உதவியாய் இருக்கிறார் என்பதாகும். இதனால் Drews டிருயிஸ் எழுதிய புஸ்தகத்தை மொழி பெயர்த்திருக்கக் கூடாது என்று நாம் சொல்ல வரவில்லை. ஆனால் பின் என்ன இதன் அருத்தம் என்றால் கம்யூனிஸ்ட் கக்ஷியைச் சேர்த்த வர்களும் நாத்திகப் பிரகிருதி வாதிகளும் பணக்கார வகுப்பில் முற்போக்காளர்களாயுள்ள பகுதியோடு ஓளவு ஒத்துழைத்துப் போதிலும். அந்தப் பகுதியார் பிற்போக்காளர்களாய் மாறுகிற காலங்களில் அவர்களை தாட்சண்யமில்லாமலும் இடைவிடாமலும் பொது மக்களுக்கு வெளிப்படுத்திக்காட்டி விடவேண்டும் என்பதுதான். மேலும் நாம் சொல்லுவதின் கருத்து என்ன வென்றால் பதினெட்டாவது நூற்றாண்டில் உண்மையில் புரட்சி வேகம் கொண்டிருந்த பணக்கார வகுப்பின் தற்காலத்திய பிரதிநிதிகளோடு ஒத்துழைக்க மறுப்பதும்தயங்குவதும், மார்க்ஸுடைய கொள்கைகளையும் பிரகிருதிவாதக் கொள்கைகளையும் காட்டிக்கொடுத்ததாகும். ஏனென்றால் தற்காலம் மதத்தின் பெயரால் வியாபித்திருக்கும் அந்தகாரத்தோடு நாம் தொடங்கி இருக்கும் யுத்தத்தில் Drews டிரீவ்சைப் போன்றவர்களின் கூட்டுறவு எதாவது ஒருவழியில் வேண்டியிருக்கிறது.

பத்திரிகைகள் நாஸ்த்திகத்திற்கு இடம்தரவேண்டும்.

"மார்க்ஸ் கொடியன் கீழ்" என்ற இப்பத்திரிகை நாஸ்திகப் பிரசாரத்திற்கு அதிக இடம்தர வேண்டும். நாஸ்திக நூற்களைப் பற்றிய குறிப்புகள் ஏராளமாக வெளியிடவேண்டும். இவ்விஷயத்தில் நம் கவர்ன்மெண்ட் வேலையில் ஏற்பட்டிருக்கும் குறைவை இப்பத்திரிகை நிவர்த்திக்க வேண்டும்.

தற்கால பணக்கார வகுப்பின் சுயநலம், பணக்கார வகுப்பின் ஸ்தாபனங்கள் ஆகியவற்றிற்கும் தற்காலத்திய மதக் கூட்டங்கள் மதப்பிரசார சபைகள் ஆகியவற்றிற்கும் உள்ள ஒருங்கிய சம்மந்தத்தையும், ஒற்றுமையையும் கோர்வையில் காணக்கூடியவண்ணம் திருஷ்டாந்தங்கள், உவமானங்கள் ஆகியவைகளுடன் விளங்கும் புஸ்தகங்களையும் சில்லரை வெளியீடுகளையும் உபயோகப்படுத்தவேண்டியது முக்கியமாகும்.

அமெரிக்காவில் உள்ள ஐக்கிய நாடுகளைப்பற்றிய விஷயங்கள் மிகவும் முக்கியமானவை. ஆனால் அவைகளின் மூலம் சர்க்கார் அதிகார தோரணையாக மதத்திற்கும், முதலாளிகளுக்கும் ஏறபடுத்தி இருக்கும் சம்மந்தம் அவரிப்படாது என்றாலும் அவைகளில் இருந்து மென்ஸ்வீக் கட்சியாரும்,

சோஷ்ய லிஸ்ட் புரட்சிசட்சியா ரும், (Anarchist) ஆனார்க்கிஸ்ட்) எதேச்சசாரிகளும்மண்டி இட்டு வைக்கும் "தெய்வ" மாசிய சுவீ னஜனநாயகம் என்பது பணக்கா ரர்களுக்கு எது நன்மையைத் தருமோ அதை கோவில் மேடை யிலிருந்து பிரசங்கம் செய்யும் உரிமை தவிர வேறல்லவென்பது விளங்குகிறது. பணக்காரர்களு க்கு எப்படிப்பட்ட பிரசங்கங்கள் நன்மை பயக்குமென்றால் மதப் பற்றையும், அஞ்சானத்தையும், மூடநம்பிக்கையையும் அதிகப் படுத்துவதும் பாட்டாளிகளை (தொழிலை) கொள்ளையடிப்பவர் களை ஆதரிக்கக்கூடியதான பிற் போக்கான எண்ணங்களைப்பரப் பும் பிரசங்கங்களேயாகும்.

தீவிர பிரதிருஷ்வாத பிரசாரம் செய்ய என்னும் இப்பத்திரிகை சோஷ்லிசப் பிரசங்கங்களைப்பற்றிய மதிப்புரைகளை வாசகர்களுக்கு வழங்குவதோடு, அத்தத்த வாசகர் கூட்டங்களின் சந்திக்கும், அறி வுக்கும் தக்கபடி, யார் யார் எந்தெ ந்த புஸ்தகங்களை, எப்படி எப்படி படிக்கவேண்டும் என்பதையும் குறிப்பிடுமென்று நம்புகிறோம். இப்பத்திரிகை இவ்விஷயத்தைப் பற்றி என்ன என்ன புஸ்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன வென்றும், இன்னும் வெளியிடப் படவேண்டியவை என்ன என்ன பாக்கியிருக்கின்றனவென்றும், குறிப்பிதிவதோடு, மேழிபெயர் ப்புகளில் அசம்பாவிதமானவை ற்றை நீக்கி கூடியவரை சரியான வற்றை மாத்திரம் சிபார்சுசெய் யும் எனவும் நம்புகிறோம்.

கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர் ந்த பிரதிருஷ்வாதிகளுடன் ஒத் துழைப்பதோடு நமது தீவிர பிர திருஷ் வாதிகளுடைய கடமை கின்றுவிடவில்லை. இதை யும் விட முக்கிய கடமை என்னவெ ன்றால் தற்கால விஞ்ஞான அறிவு ஆராய்ச்சியாளரின் பிரதிநிதிகளில் பிரதிருஷ்வாதத்தின் சார்பிலிரு ந்துகொண்டும், படித்தகூட்டத் தார்களென்று சொல்லிக்கொள்ப வர்களில் சுவீனதத்துவவாதிகளின் ஆத்மார்த்த வாதத்திற்கும், சா தேக வாதத்திற்கும் எதிரிடை யாக பிரதிருஷ்வாதத்தைக் கொள் கைகளை ஸ்தாபிதத்தயங்காமல் இருப்பவர்களோடு பூரணமாக ஒத்துழைப்பதாகும்.

"மார்க்ஸ் கொடியின் கீழ்" என்ற பத்திரிகையின் ஒன்று இர ண்டு இதழ்களில் Enstein இன் ஸ்டீன் உடைய Relatirity தியே டிரிட்டி என்ற கொள்கையைப்ப ற்றி, டிமிரியாசோ Temiryasavo எழுதி இருக்கும் கட்டுரையில் இருந்து மேலே நாம் இரண்டாவ தாகக்கூறி இருக்கும் ஒத்துழைக் கும் இப்பத்திரிகையின் மூலம் ஏற்பட்டுவிடும் என்று நம்பவும் இடமிருக்கிறது. இதைப்பற்றி நாம் அதிக கவலை எடுத்துக்கொள் ளவேண்டும். தற்காலம் விஞ் ஞான சாஸ்திரத்தில் ஏற்படும் முக்கிய மாறுதல்களின் பயனை தத்துவ ஞானத்தில் பல பிற்போ க்கான கொள்கைகளும் போக்கு களும் தலைவடுத்து இருக்கின் றன என்றும் விஷயத்தையும் நாம் மனதில் இருத்தவேண்டும். ஆகையால் விஞ்ஞான அறிவில் கடைசியாகனப்பட்டிருக்கும்புரட் சியினால் முன்னுக்கு வந்திருக்கும் விஷயங்களை நாம் சோதித்து அறிவதோடு, இந்த தத்துவ ஞான ப்பத்திரிகையின் மூலமாக இவ் வேலையைச் செய்யும்படி விஞ்ஞா னஅறிவாளிகளை நாம் தூண்ட வேண்டியது மிகவும் முக்கியமான கடமையாகும். இப்படி நாம் செய்யாவிட்டால் நமது தீவிர பிரதிருஷ்வாதம்மாகவும் இருக்காது "மார்க்ஸ் கொடியின் கீழ்" என் னும் பத்திரிகையின் முதல் இத ழிலேயே டிமிரிசாயாசோ Timeriyasvo எல்லா தேசங்களி லும் பணக்கார படித்த கூட்டத் தின் பிரதிநிதிகளில் பெரும்பா லோர் Enstin இன் இடம் கொள்கையையே நம்பி இருப்ப தாகவு ஆனால் அவரை Enstein பொருத்தமட்டில் அவர் பிரதிருஷ் வாதத்தை நேரிடையாகத்தாக்க வில்லை என்றும் எடுத்துக்காட்டி இருக்கிறார். இந்த உண்மை அவரை Enstein பற்றி மா த்திரமல்லாமல் பத்தொன்ப தாவது நூற்றாண்டு கடைசியில் இருந்து காலதுவரையில் கிளப்பி விஞ்ஞான அறிவை சீர்திருத்தம் செய்த பெரியார்களில் பெரும் பாலானவர்களைப்பற்றியும் புலப் படுத்திருக்கிறது. (தொடரும்)

டெண்டர் நோட்டீஸ்

ஈரோடு முனிசிபாலிட்டி.

—0:—

பூந்துறை ரோட்டில் பெரும்பள்ளம் ஓடைக்கு ஒவ்வொன் றும் 30 அடி நீளமுள்ள 4-கண்கள் கொண்ட ஒரு பாலம் கர்டர் போட்டுக்கட்டுவதற்கு ஈரோடு முனிசிபல் ஆபீசில் 1933-ஜ ஜனவரி மாதம் 20-ந்தேதி மாலை 4-மணிவரையில் அடியில் கை யொப்பமிட்டவரால் டெண்டர்கள் வாங்கப்படும். டெண்டர் களை சீல் வைத்து "பாலத்திற்கு டெண்டர்" என்று எழுதிக் கொடுக்கவேண்டியது. ஏற்கனவே இந்த முனிசிபாலிட்டியில் கண்ட்ராக்டர்களாயிருப்பவர்கள் டை வேலைக்கு டிபாசிட்டுக்காக தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் ரூ. 500. ஈரோடு முனிசிபல் கௌன்சில் சேர்மென் அவர்கள் பேரில் ஈடுகாட்டிக்கட்டிய பாஸ் புஸ்தகத்துடன் டை டெண்டர்களைக் கொடுக்கவேண்டியது. மற்றவர்கள் இந்த முனிசிபாலிட்டியில் தங்கள் பெயரைக் கண்ட்ராக்டர்கள் லிஸ்டில் பதிவு செய்துகொள்ள மேல்கண்ட டிபாசிட் ரூ. 500 தவிர இந்த ஆபீசில் ரூ. 5 கட்டவேண்டியது.

எஸ்டிமேட் தொகை ... ... ரூ. 33300
கண்ராக்டில் விடக்கூடிய வேலையின் மதிப்பு ரூ. 14000

டை வேலைக்காகத் தேவையான பிளானும் எஸ்டிமேட்டும் முனிசி பல் ஆபீசில் ஆபீஸ் நேரங்களில் பார்வையிடலாம்.

யாதொரு டெண்டரையும் அங்கீகாரம் செய்யவோ, குறைந்த டெண்டராயிருந்த போதிலும் காரணம் காட்டாமல் தள்ளுபடி செய்யவோ முனிசிபல் கௌன்சிலுக்கு அதிகாரமுண்டு

கே. ஏ. வேங்கடாவுத்,
சேர்மென.

குமரன் பிரஸ்

1933

ஆபீஸ் காலண்டர்

பிரசித்தி பெற்ற நமது "குமரன் பிரஸ்" தினசரி தாள் கிழிக்கும் காலண்டர் சென்ற வருஷம் போலவே நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டு வழவழப்பான ஆர்ட் பேப்பரினால் ஒட்டிய சித்திரைக்கலை திகழும் அழகிய தடித்த அட்டையில் சேர்த்து நேர்த்தியாக பைண்டு செய்யப்பட்டு கண்கவர் வனப்புடன் விளங் குகிறது.

இது சாதாரணமாய் காலண்டர் 1க்கு ஒரு ரூபாய் பெறு மென்று யாவரும் மதிப்பிடுகிறார்கள். உங்கள் பங்களாக்களையும் கூடங்களையும் ஆபீஸ் ரூம்களையும் அழகு படுத்திக்கொள்ள மிக ஏற்றது.

மூன்று மாதிரிகள்.

1. பெரிய எழுத்தில் இங்கிலீஷ் தேதி, வருஷம், மா தம், கிழமைகளோடு கூடியது.

2. இங்கிலீஷ், வருஷம், மாதம், தேதி, கிழமைகளோடு தமிழ் வருஷம், மாதம், தேதி கிழமையும்; அமாவாசை கிருத்திகை முதலிய முக்கிய இந்துமத விரதாதிகளோடு கூடியது.

3. இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று வருஷம், மாதம், தேதி, கிழமைகளும் பண்டிகைகளும் (சிறிய அளவு)

விலை	1-தெ.	2-தெ.	3-தெ.	தபால் செலவு 1 & 2	3-தெ.
1-க்கு	0—6—0	0—6—0	0—4—0	0—4—0	0—4—0
12-க்கு	4—2—0	4—2—0	2—12—0	2—4—0	1—12—0

ஒரு காலண்டர் வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது. காலண்டர் கிரையும் 0—6—0, தபால் செலவு 0—4—0, சேர் த்து 0—10—0 ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு காலண்டர் அன் றிஜிஸ்டர் தபால் பார்சலில் அனுப்பப்படும். வியாபாரிகளுக்கு நல்ல கமிஷன். தேவைக்கு உடனே எழுதவும்.

குமரன் பிரஸ், காஞ்சிபுரம்.

இனிவரும் புது உலகம்.

பாடுபட்டுழைப்போன் அதன் பலன் நுகர்தல் வேண்டும்.

சோம்பற் "சுகவாழ்வு" தொலையவேண்டும்.

(கோவை ஆர். கிலன்)

இவ்விருபதாம் நூற்றாண்டில் நாளுக்கு நாள் நிமிடத்துக்கு நிமிடம் மனிதன் பல அரிய ஆராய்ச்சிகளில் வெற்றிபெற்று இயற்கைச் சக்திகளைத் தன் இன்ப வாழ்விலீடுபடுத்திப் பயன்பல பெற்று இன்புறுகின்றான். இதுகாறும் மிகவும் மேலானதெனவும், சௌகரியமானதெனவும் கருதப்பட்ட பல வசதிகள், சாதனங்கள் எல்லாம் விஞ்ஞான விளக்கம் பெற்ற இற்றை ய மனிதனின் ஆராய்ச்சிகளால் புறக்கணிக்கப்பட்டு, அவற்றினும் பன்மடங்கு மேலான வசதிகள் இடம்பெற்றுள்ளன. பழையன கழிதலும், புதியன புகுதலும் ஆகிய இதுவே உலகில் நியதியாகவுமுள்ளது. காட்டுமிராண்டிக்காலத்தியசக்தி முக்கிக்கல் பட்டு மடிந்து நெருப்புப்பெட்டியை அடைந்த உலகம் இன்று மின்சார சக்தி தோன்றி சிறுகச் சிறுக (Electricity) நெருப்புப்பெட்டியின் அவசியத்தைத் குறைத்து வெளியேற்றி ஆதிக்கம் பெற்று வருவதையும் ஊன்றிக் கவனிக்கின் நமது கூற்றின் உண்மை விளங்கும். இவ்வாராய்ச்சிகள் வலுப்பட்டுப்பயன் தரப்பல சௌகரியங்கள் மலிந்து மனிதசமூக வாழ்க்கையைநாகரீகப்பாதையில்— முன்னேற்றத்திறையில் செலுத்துகின்ற தென்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

ஃஃ ஃஃ

இச் சௌகரியங்களெல்லாம் யார் கண்டுபிடித்தாலும் மனிதசமூகத்துக்குச் செய்துகொடுப்பவன் யார்? தொழிலாளி என்பதையாரே மறுக்கமுடியும்? இன்றையநாகரீக வளர்ச்சிக்கு தொழிலாளர்களே காரணபுருஷர்கள் என்பதோடு அவர்களுக்கு உலகம் என்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடைத்து என்றும் நாம் துணிந்து கூறுவோம். ஆனால் முதலாளியின்முதலின்றிதொழிலாளி மட்டும் எப்படி இக்காரியங்களைச் சாதிக்கமுடியும்? எனச்சிலர் ஐயுறல் சாலும்.

ஆதலின்

முதலில் முதலாளி, தொழிலாளி என்பவர்யார் என்பதை ஆராய்வோம். முதலுடையவன், பணம் படைத்தவன் முதலாளி என்றும், தொழில் செய்பவன், கஷ்டப்பட்டு உழைப்பவன் எதாலாளிஎன்றும் பொதுவாக வழங்கப்படுகிறது. முதல் எனினும், பணம்எனினும், செல்வம் எனினும் ஒன்றே; அவை ஒரு பொருட் சொற்கள். இந்த முதல்என்பது என்ன? என்பது முதலில் பெறப்படவேண்டும். பொருள்களுக்கு நாணயமூலமாக நம்மால் அளிக்கப்பட்ட மதிப்பே முதலாகும். இதை நன்கு கூர்ந்து நோக்கின், மதிப்பிடப்படும் பொருளை உண்டாக்குவதில் தொழிலாளியின் உழைப்பின் அளவைமதித்தே பொருள்கள் மதிப்பிடப்படுதல் அறியலாம். இதிலிருந்து முதல் என்பது உழைப்பாளியின் அல்லது தொழிலாளியின் உழைப்பின் படன் என்பது விளங்குகிறதல்லவா?

ஃஃ ஃஃ

பாடுபட்டுழைப்பதொரு தேசம்; அதன் பலனை அநுபவிப்பதொருதேசம். காடு வெட்டித்திருத்தினர் யாரே? தேசம்கட்டியாள அந்நியரைப்பாரே! எனத்தேசீய கீதங்கள் தெருவெங்கும் ஒலித்ததைக் கேட்டிருப்பீர்கள். "ஒரு தேசம் உழைக்கிறது, அதன் பலனை வேறொன்று அநுபவிக்கிறது. இதுமுறையல்ல" என்பதே அதன் வெள்ளையான பொருளாகும். இச்செய்யுளிற் கூறப்பட்ட கொள்ளையடிக்கும் தேசம், கொள்ளையடிக்கப்படும்தேசம் ஆகிய இரண்டிலும் தமது இரத்தவியர்வை சிந்த உழைக்கும் உழைப்பால் நாட்டுச் செல்வத்தைப் பெருக்கி நாகரீகப்பாதை பண்படுத்தும் தொழிலாளிகள் உண்ண உணவுக்கும், உடுக்க உடைக்கும், இருக்கஇடவசதிக்கும் ஏனைய மனிதனுக்கு இன்றியமையாத வசதிகளுக்கும் எங்கித்தவிக்க, பலசோம்பேறிகள் யாதொரு வேலையுஞ்செய்யாது தொழிலாளர்உழைப்பின பயனைக்கைகொண்டு இளைப்பாறி உண்டு உடுத்தி, மாடமாளிகைகூடகோபுங்களுடனும் மோட்டார், ஆகாயக்கப்பல், தந்தி டெலிபோன் வசதிகளுடனும் உல்லாசமாகக் கவலையற்றுக் காலங்கழிக்கின்றார்கள். இதைநோக்குழி 'தேசீயம்' "தேசாபிமானம்" எனக்கூறி உழைத்தாருழைப்பை இளைப்பாறியுண்ணும் சோம்பேரிகளுக்குச் சலுகையும், சௌகரியமும் காட்டும் முறையில் தொழிலாளர் பிரச்சினையை மறைத்து மக்களைவிடத் தேசமே பிரதானமெனப் போலிநடிப்புக் காட்டுவது ஓர் செப்பரும் புரட்டு என்பது தெற்றென விளங்குகிறது. இவ்வசட்டுத்தேசீய சோம்பேறிவாதத்தை விடுத்து உண்மை நிலைகண்டுணருங்கள். அப்பொழுது மதப்பக்தியோ, கடவுள் பக்தியோ, தேசபக்தியோ போன்ற போலி அபிமானங்கள் நீத்த மனிதநல்வாழ்வே லக்ஷியமெனும் உளப்பான்மை நீவிர்பெறுது, "பாடுபட்டுழைப்ப தொருசாரார் தொழிலாளிகள் அதன் பயனை அனுபவிப்பது ஒருசாரார். (முதலாளிகள்)" ஆக சமூகநிலை இருப்பதை உணர்வீர்கள்.

ஃஃ ஃஃ

மேற்கூறியவாறு, காலைமுதல் மாலைவரை நெற்றி வியர்வை நிலத்திற்கொட்டி வெயிலிலும், மழையிலும் நடுங்கு முழங்காற்சேற்றிலும் சுடுமணலிலும் அலைந்து உழைக்கின்ற தொழிலாளி தன்னுழைப் பின் பயனைத் தானனுபவிக்கும் உரிமையற்று ஜனத்தையும் சும்மாயிருக்கும் சோம்பேறிப் பணக்கார முதலாளிக்குக் கொடுத்தமுதுவிட்டுத்தானும், தனது மனைவி மக்கள் சுற்றமும் கஞ்சிக்கும், உடைக்கும், கல்வி, உறைவிட விசதிக்கும் வழியற்று வாடித்தவித்தல் கண்டும் இத்தக்கொடுமையைப்பற்றி எந்தத்தேசீயமும் பேசாது வாய் மூடி மௌனியாய் இருப்பதின் இரகசிய மென்ன? முதலாளி இரகசியமென்ன? முதலாளி தத்துவம் மொழிந்தால். பணக்காரதத்துவம் மொழிந்தால் தேசீயம்தானே செத்து மடிந்துவிடும் என்னுமுண்மை யுணர்ந்தே தேசீயம் ஈன்று ஜனமையாய தென்பதையாரே மறுக்கமுடியும்.

ஃஃ ஃஃ

நிற்க, நங்கள அரிய உழைப்பால் உலகையே பிரமிக்கச்செய்யும் புதுப்புது நூதன இயந்திரங்களையும் சதானங்களையும் காணும் தொழிலாளர், கள் ஏன் இத்தகைய கேவலமான இழிவான, கொடுமையான வாழ்வை ஏற்று நடத்துகின்றனர் என்பதை யாராய்ந்து பாருங்கள். மனிதஜல் வாழ்வுக்கின்றியமை யாதான கல்லுணவு, இடையாடை, உறைவிடமான பெறுவதற்குத் தொழிலாளர் கொண்டுள ஆர்வத்தில் மதவுணர்ச்சியும், கடவுளுணர்ச்சியும் முட்டுக்கட்டையாயிருத்தலைக் காண்பீர்கள். சர்வல்லமை படைத்து இப்பெரும் உலகையியக்கும் தொழிலாளர்கள் சில செல்வரித்துப்பீன புளுகுக்களஞ்சியங்களான புத்தகங்களுக்கும், அறிவாராய்ச்சிக்கொவ்வா அசட்டு வைதீக மூடமதக்கோட்பாடுகளுக்கும் தலைவணங்கித் தமதுசுயமதிப் பிழந்து தவித்தல் அறியாமை வயப்பட்ட பேதமையர்லேயேயாகும்.

ஃஃ ஃஃ

பலரும் பலகாலும் எமாறூர் என்பது உலகியல் அநுபவங்கண்டதோர் உண்மை. எனவே அறியாமையால் எமாற்றமடைந்த தொழிலாளருலகம் விழிப்படைந்தில் அதிசய மொன்றுமில்லை. "பல்லாயிரகாலங்களாக வருடங்களாய்ந்த தமது நல்வாழ்வுக்கு தம் புரிவன வெனக் கருதப்பட்டுத் தம்மால் மதிப்பும் செல்வாக்கும் மரியாதையும் பெற்றுவந்த பல்வேறு மதங்களுக்கு, கடவுள்களும் தமக்கு அதிகப்படியான நன்மைகள் புரியாவிடினும் தாம்வருந்தியுழைத்த பயனையும் நுகரவிடவில்லை" என்பதை தொழிலாளர் உணர்கின்றனர். அதேகாலையில் மதமும் கடவுளும் சும்மாயிருக்கும் சோம்சேரிகளின் சுகவாழ்வுக்கடிகோலுவதையும்காண்கின்றனர். எய்த்துப்பிழைப்போர் இன்பவாழ்வு நடாத்தலும் உடல்வருந்தியுழைப்போர் ஓயாத்துன்பம், மீளாக்கவலையும், வறுமையும், பிணியும் அநுபவித்தலும் மனிதஅறிவிக்கே பொருந்தாதிருக்க, மன, வாக்கு, கயத்துக்கெட்டாத, குணங், குறி, கிற, உருவற்ற, விருப்பு, வெருப்பு, பாரபக்ஷபாதி குணதோஷமற்ற பரம்பொருள் என்று கூறப்படும் கட்வுளின் நீதி முறைக்கடுக்குமா? எனத் தொழிலாளிகள் ஆராய முற்படும் பொழுது கடவுளுணர்ச்சியும், மோக்ஷ, நரக, முன்ஜென்ம, புண்ணிய, பாவக்கற்பனை யெல்லாம் உழைக்க விருப்பமற்ற ஒரு சிலசோம்பேரிகள் சுயநலங்காரணமாகப் பிறருழைப்பில் பிழைத்தின்னக்கண்டதோர் வழியெனக்கண்டுணர்கின்றனர். மேற்கொண்டு திருவிஆராயுங்கால் சோம்பேறி வாழ்க்கைப் பிரியர்களான பணக்காரப்பகற்கொள்ளைக்கார முதலாளிகள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டி ஏழைத் தொழிலாளரானவர்கள் உயர்நிலை எய்தாவண்ணம் செய்துள சூழ்ச்சியே அரசியல் அதிகாரச்சட்டங்களும், நீதிமுறைகளும் என்றறிகின்றனர். இவ்வுண்மைகளை கண்குளிர்ந்த தொழிலாளர் தம்முள் "மேலோங்க எங்கித்துடித்துநிற்கும்" தமது மனிதசுபாபகதை எங்ஙனம் புறக்கணித்தல் இயலும்?

பாடுபட்டுழைக்கும் தொழிலாளர்கள் அப்பாட்டின் பயனைத்தாமே அநுபவிக்கத்தமது இருகரீட்டியடைய முயல்கையில் முட்டுக்கட்டையாய்எதிர்த்துநிற்கும் எதையும் பொருட் படுத்தமாட்டார்கள். மனச்லியால் தவிடு போடியாக்கிட முயல்வார்கள் இன்றின் றெனினும்இன்னும் உலகமெங்கும் அவர்கள் சின்னளில் வெற்றிபெற்று வீரமுழக்கம் புரிவது மட்டும் உறுதி. உலகை ஆக்கியிருக்கும் சர்வ வல்லமை படைத்த தொழிலாளர் தம் ஒருமுகப்பட்ட உறுதியான சக்திக்கு முன்ஒரு சிலசுயநலச்சோம்பாத்ய எதிர்ப்பு எம்மாத்திரம்?

[6-ம் பக்கத்தொடர்ச்சி.]

யார் எம் மதத்தில் இருந்தாலும் யார் எம் மதத்தை விட்டாலும் அவர்கள் இருப்பதும், இறப்பதும் இந்நாட்டிலே,பிள்ளைகுட்டிகளைப் பெற்று வாழ்வதும் இந் நாட்டிலே, அவர்கள் பாடுபட்டு தேடவேண்டியது இங்கே, தேடியதைப் புதைத்து வைப்பதும் இங்கே. ஆகவே மத மாற்றத்தால் எவருக்கும் எத்தகைய நஷ்டமும் இல்லை என்பதை உணர்க.

இது இங்ஙனமாக "தேசீயம்தழை

க்கவும் இந்துசமயம் செழிக்கவும் தீண்டாமை ஒழியவேண்டும்" என்று தோழர் ச. ரா. கூறுவதேன்? தாங்கள் செய்யும் கொச்சியாலும் வைதீகர்களுடைய மூடப்பிடிவாதத்தினாலும் அறிவு இயக்கத்தாலும் இந்துமதம் ஆணிவேர் அற்ற மரம்போல் ஆடிப் போய் கிற்பது தோழர் ச. ரா. அவர்கள் கூறிய கண்களுக்கு நன்கு புலனாகின்றது. இந்து மதம் விழுந்தால் இந்திய தேசியமும் உடன் கட்டை ஏற வேண்டியதுதான். மத மயக்கம் மறைந்த பின் வந்தேமாதரம் மந்திர மகிமையும் பாரத மாதாவின் பெருமையும் மீடிக்குமா? ஆகையால் இந்துமதம் சிறக்க வேண்டும், தேசியம் வளர்க்க வேண்டும் என்ற ஆசைகளை மக்களுக்கு ஊட்டுகிறார். அவ்வாசையை பூர்த்தி செய்யுமாறு மதவாதிகளை வேண்டுகிறார். தீண்டாமை செய்யுமாறு பிறமதஸ்தர்களை விழை கிறார். உண்மையில் இந்துமதம் அழிய வேண்டியிருக்க அப்படி அழிய வேண்டிய காலமும் நெருங்கிவிட, தோழர் ச. ரா. அவர்களின் போலிப் பிரசாரம் மக்கள் கண்களில் மண்ணை தூவுவதாய் இருக்கின்றது. தோழர் ச. ரா. அவர்கள் போன்றார் உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசித்திரிவதால் பாமரமக்கள், உண்மையை அறிவதும் அறிந்ததை சாதிப்பதும் இயலாது போய் விடுகின்றது.

"சாத்வீக" போர் நடத்தும் அஹிம்ஸா தர்மவாதிகள்," "ஹிம்சையில் உறுதி கொண்ட" புரட்சிக்காரர் களோ அரசாங்கத்திற்கு துக்கி காட்டுவது போல் தோழர் ச. ரா. அவர்கள் மதவாதிகளுக்கு காஸ்திகர்களோ பூச்சி காட்டுகிறார். உலகத்தில் கொட்டிக்குல்தான் தேன்; பனங்காட்டுநரி சலசலப்பிற்கு அஞ்சாது. ஆஸ்திக வெறிக்கு நாத்திகமே எற்ற மருந்து. இதன்றி உய்யும் மார்க்கம் வேறு எதுவும் இல்லை. இதை ச. ரா. அவர்கள் அறிந்தும் அறியார் போல் நடப்பதே இந்து மதத்தின் பாக்கியம்!

மேலும் தீண்டப்படா மக்களிடம் உயர் குலத்தினர் என்போர் காட்டும் மனப்பான்மையை 'மூட்டாள் தனமான பிடிவாதம்' என்று தோழர் ச. ரா. அவர்கள் கூறுகிறார்கள். ஜாமரின் அரசரும், தோழர் டி. ஆர். ராமச்சந்திர அய்யரும் ஸ்ரீநிவாசராகவாரியரும், தோழர். எம். கி. என். முத்துக்குமாரசெட்டியாரும், மன்னர்குடி கே. ஜி. நேஷனல் முதலியாரும் மூட்டாள்கள் என்றால் அறிவாளிகள் என்போர் யாவர்? உயர் குலத்தினர் என்போரின் ஆய்ந்து தெளிந்த அயோக்கியத்தனத்தால் நம் நாட்டில் தீண்டாமை என்னும் கொடுமை தோன்றியது. அக்கொடுமை இன்று தலைவிரித்தாடுவதற்கும் அவ்வயோக்கியத் தனமேகாரணமாகும். ஆதலால் அவ்வயோக்கியதத்னத்தை கண்ணெதிரிய சுயமரியாதை அன்றி வேறு ஆயுதம் உண்டோ?

முடிசாகக் கூறுமிடத்து 'மதமே இந்தியாவை பற்றிய சாபம் (Religion is India's curse) என்ற தோழர் லாலா லஜபதிராய் கண்ட முடிவை தோழர் ச. ரா. அவர்கள் போன்றார் ஏற்றுக் கொள்ளும் வரை நாட்டிற்கு விமோசனம் இல்லை என்பதை யாவரும் உணர்க. தோழர் ச. ரா. அவர்களின் கொச்சி எல்லாம் அறிவு இயக்கத்தால் விழித்தெழுந்த மக்களுக்கு மீண்டும் மயக்கம் ஊட்டுவதாயும், எதிர் நோக்கும் விடுதலையை வழியில் கின்று தடுப்பதாயும் உளது.

ஆயினும் ஓங்கிவரும் அறிவு இயக்கம், நாத்திக தர்மம் பெருகெருப்பு. அதற்கு ஈரமில்லை; அதை சமுத்திரமே பொங்கி வந்தாலும் அணைத்தற்கு முடியாது என்பதை பண்டிதர்களும் பாமரர்களும் உணர வேண்டுகிறோம். அப்பெரு நெருப்பிற்கு இந்து சமயமும் மற்ற சமயங்களும் ஒருங்கே இரையாவது நிண்ணம்; அப்பொழுதே மக்கள் உண்மை விடுதலை பெறுவர். உலகத்தன்பம் யாவும் மறையும்; ஞானம் என்னும் தென்றல் யாண்டும் வீசும்; வாழ்க்கை நலம் என்னும் அருநீர் ஓடையில் யாவரும் ஒருவராய் நினைத்து எழுவார்கள்.

இடையே தோழர். ச. ரா. போன்றார் முயற்சி வீண் கொச்சியாகவே முடியும் என்பது முற்றுணர்ந்தார் முடிபு.

இக்கட்டுரையை முடிக்கும் சமயம் "மோசம் போனேன் கோபாலா" என்று மேற்கு கடலோரத்திலிருந்து தோழர் ச. ரா. அவர்கள் கூறுவது காதில் விழுகிறது. தோழர் ச. ரா. அவர்கள் "மாட்டை அடித்துக் கொண்டு, முக்காடிட்டுக் கொண்டு திரியும் பிராமண ஆண்டியை இனி நம்புவதில் பிரயோஜனம் இல்லை" என்ற முடிவிற்கு வந்து விட்டார்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மனதிலும் மதம்போல் பதிந்து கிடக்கின்றது. நம் நாடு நம் நாட்டவர் என்று வேறு படுத்திக்குறிக்கும்பொழுது பிறநாடு களையும் நாட்டவரையும் ஒதுக்கித் தனிப்படுத்துவதாகின்றது. தற்காலம் மக்களிடையே தளர்ந்து வரும் பார்த்த நோக்கங்களுக்கு இது முற்றும் முரண்பட்டதாகும். ஒவ்வொருவரும் தன்னை உலகில் ஒருமனிதன் எனவே கொள்ளவேண்டும். உலக சகோதரத்துவம் ஏற்படவேண்டும். காற்றைப்போன்று நான் ஒரு சுதந்தரமனிதன். தேசம், சாதி, நிறம், மதம் முதலிய கேடுபாடுகளை நான் கருதுவதில்லை.

விமரிசனம்.

ஐக்கிய மாகாணத்தில் விமரிசனம் இயக்கம் ஏற்பட்டதேன்? பாமர மக்கள் காங்கிரஸ்மீது பெருத்த நம்பிக்கை கொண்டிருந்தனர். அவர்களுடைய உணர்ச்சியைக்கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே சட்டமறுப்பு நின்றதும். அவர்கள் தங்களுடைய தாழ்ந்த நிலைக்குப்பரிகாரம் வேண்டுமென வற்புறுத்தினர். நிலைமை கைக்கடங்காமற்போய்விடுமென்றேதான்றியது. அடங்காது போய்விட்டால் பாமரமக்கள்மீது காங்கிரஸ்கொண்டுள்ள பிடி தவறிப் போகும் நிலைமை வேறுவிதமாக முடிவுறும். இதைச்சாந்தப்படுத்த வேஜவஹர்லால் நேரு அங்கு வரி மறுப்பை ஆரம்பித்தார். இன்றேல் பாமர மக்களுக்கு அவர் பதில்கூற முடியாதபடி போய்விடும். வெளியிலிருந்து அவர்களுடைய கஷ்டங்களையும், வேதனைச்சொற்களையும் சகிக்க முயல்வதைவிட தலைவர்களுக்குச் சிறையிலிருப்பதே சுலபமான காரியமென்றேதான்றியது. இதுதான் அவர்கள் ஒருவர் பின்னொருவராகச் சிறை புகுக்காரணம். சர்க்காரும், காங்கிரசின் சக்தியையும், செல்வாக்கையும் மட்டுப்படுத்தி இவ்வளவுதான் என்று காட்டுவதற்காக அனைவரையும் சிறையிலடைத்துக்கொண்டேயிருந்தனர்.

சுயமரியாதை இயக்கம்.

தோழர் ஈ. வெ. ரா. வை நான் அறிவேன். அவர் தமது சுற்றுப்பிரயாணத்தை முடித்துவிட்டுத்திரும்பியதும் அவரோடு கலந்து பேச ஊர் வந்துகொள்கின்றேன். அவர் சமீபத்தில் வெளி நாடுகளுக்குச் சென்றிருப்பதால் புதிதாகச்சில விஷயங்களை சொல்லக்கூடும். அவற்றையும் அறிய விரும்புகிறேன். சுயமரியாதை இயக்கக்கொள்கைகள் சிறந்த கொள்கைகள்தான். கடவுள் இல்லை என்பதற்கு கடவுளேயில்லையென்று சொல்வதைவிடக் கடவுளேயில்லையென்று திட்டமாகச் சொல்லிவிடுவதே சிறந்ததாகும். ஒரு இயக்கத்தினுடைய கொள்கைகளை வகுக்கும் போது சுருக்கமாகவும், திட்டமாகவும் குறிப்பிட்டுவிடுவதே நலம்.

பாமர மக்களிடையே பிரசாரம் செய்யும்போது அவர்கள் எளிதில் உணரத்தக்க விதத்தில் சுயமரியாதை இயக்க ஆராய்ச்சி முறையில் விஷயங்களை விளக்கவேண்டும். உலக சிருஷ்டி, சூரியன், சந்திரன். முதலியவற்றைப்பற்றிய விஷயங்களை அவர்கள் மனதில் நன்கு படும்படி கற்பிக்க வேண்டும். நன்கு பதிந்துவிட்டால் வேறு எதுவும் அவர்களை மாற்ற முடியாது.

Ready for Sale! Ready for Sale!!

The Crux of the Indian Problem
By Dr. Paranjpye M. A., D. Sc.

The English edition of the above book published by R. P. A. through Watts & Co., London, is ready for sale with us. All those who are sincerely interested in social advance and rejuvanation must go through Dr. Paranjpye's "Crux of the Indian Problem," a clear and vivid exposition of teh present degraded social status of the Hindu Society, its abominable and vain observances practised in the name of Religion & God.
Clear cut ideas! Rationalistic views! Matured sentiments!!

English Print, well gotup and neatly bound about 120 Pages

Price per copy ... ... Rs 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

Can be had of:—

Kudi Arasu Book Depot, Erode.

"SUPERSTITION OF KHADI"
A Discussion By S. Ramanathan, Pattabhi Sitharamayya, & N. S. Varadachari in English.
Price annas 2.0

14வது நாடார் மகாநாடு சென்னை.

நாடார் மகாஜன சங்கம் 14-வது கான்பரன்ஸ் சென்னையில் டிசம்பர் 30,31 தேதிகளில் கூடைபெறும். தோழர். எச். ஞானதுரை அம்மாள் எம்-ஏ[Cantab]அவர்கள் மகா நாட்டைத் திறந்து வைப்பார்கள். தோழர்களான ராவ்சாகிப் எம். எஸ். பி. செந்திக்குமார் நாடார், வி. கனகசபை நாடார் முறையே முதல் நாளிலும், இரண்டாவது நாளிலும் தலைமைவகிப்பார்கள். கல்வி மகா நாட்டைத்தோழர் அருமைநாயகம் அம்மாள் அவர்கள் திறந்த வைப்பார் கள். தோழர் கே. ஏ. எம். ஏ. காளிபப்ப நாடார் அவர்கள் தலைமை வகிப்பார்கள். அத்துடன் வாலிபர் மகாநாடும், பெண்கள் கூட்டமும் நடைபெறும். தென்ஜில்லா நகரங் களில் மகாநாட்டிற்கு ஆதரவுகாண சங்கம் பிரசிடெண்ட் அவர்களும், பாரிஸ்டர் எஸ். பி. ஆதித்தியா அவர் களும் சுற்றுப்பிரயாணம் செய்யப் புறப்பட்டு விட்டனர். மகாநாடு வெகு விமரிசையாய் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தி யாகி விட்டன என விளம்பர அதிகாரி எழுதுகிறார்.

கொழும்பு.

இராமநாதபுரம் ஜில்லா கள்ளிப்பட்டு சமதர்ம சங்கீதக் கழகம்

கடந்த 11.12-32- ஞாயிற்றுகிழ மை இரவு சுமார்10.மணி அளவில் தோழர் எம். முருகேஸ் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ்பம்பலபிட்டி [வில்லியம்ஸ்டுட்] மண்டபத்தில் கூடி யது. திரளான அபிமானிகள்விஜயம் செய்திருந்தார்கள். முக்கிய மானதோ ழர்களான கா. வி. ரெங்கசாமி, எஸ் சே ராசையா, பி. அழகையா, பி. எஸ். இரத்தினவேல், எஸ்.அருச்சு ணன், எம். மணிவேல், காசிகணபதி, எம். துரைசாமி ஆகியோர் விஜயம் செய்திருந்தார்கள். தலைவர் முகவு ரையில் இச்சங்கீத கழகத்தை ஸ்தா பித்ததுமாத்திரம்போதாது அதைகொ ண்டுநடத்த ஒவ்வொரு அங்கத்தின ரும் முயர்ச்சி எடுக்கவேண்டும் என்று சுமார் அரைமணிநேரம் சொற்பொ ழிவு நிகழ்த்தினர். இடையில் தோ ழர்காசிகணபதி அவர்கள்தேனினுமினி யசமதர்ம கீதம் பாடினர். தோழர் களான எஸ். அருச்சுனன், கே. எஸ் ராசையா ஆகியோர் குயிலினுமினியகு ரலோடு சுயமரியாதை கீதம் பாடினர் கள். இருவருக்குள் போட்டா போ ட்டிகள் நடைபொற்றன. இறுதி யாக தோழர் மணிவேல் அவர்களால் வந்தனை பசாரம் கூற சுமார் 12மணி க்குக் கூட்டம் இனிது கலைந்ததென திரு. எம். துரைசாமி எழுதுகிறார்,

"இங்கர்சால்"

"தெய்வீகன்" ஆசிரியரும், தமிழ் நாட்டுப் புரோகித மறுப்புச் சங்கத் தின் உதவித் தலைவரும், திருச்சி ஜில்லா போர்டு மெம்பருமாகிய தோ ழர் மே.வே—துரைசாமி அவர்கட்கு 15-11-32 அன்றி ஓர் ஆண்குழவி பிறந்தது. அச்சேய்க்கு "இங்கர்சால்" என்று பெயர் கொடுக்கப் பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

இங்கர்சால்

நாகை சுயமரியாதைச் சங்க அங் கத்தினரான தோழர் பி. ஆர் நாதன் அவர்களின் குமாரனுக்கு இங்கர்சால் என்ற பெயர் வைக்கப்பட்டிருக்கி றதுஎன ஒரு நிருபர் எழுதுகிறார்.

கோவை

தேவாங்கச் சிறுவர் சபை.

இச்சபையின் ஆதரவில் 10—12—32 தேதி சனிக்கிழமை மாலை 7 மணிக்குக் கோயமுத்தூர் தோழர். எம். வி. மீனாட்சிசுந்தர முத லியார் பி. ஏ., அவர்கள் தலைமையில் கோவைத் தமிழ்நாட்டுக் கூட்டுறவு பெடரேஷன் மேனேஜர் தோழர். எ. பொன்னுசாமி பிள்ளை அவர்களால் "ஐக்கியம்" என்னும் விஷயத்தைப் பற்றி ஓர்நீண்ட சொற்பொழிவு நிகழ் த்தப்பட்டது.

அவருக்குப்பின் கோவைச் சுயமரியா தை வாலிபர் சங்கத்தின் காரியதர்சி தோழர். ஆர். கிஷ்ணன் அவர்கள் இந்தி யாவிலே கூட்டுறவு இயக்கமானது எதிர்பார்த்த அளவு உபயோகப்படுத் திக் கொள்ளவில்லை என்றும், ஒரு சாராருடைய உழைப்பினால் மற்றொ ரு சாரார் பிழைக்காமல் இருக்கும் வரைக்கும் எந்த இயக்கமானாலும் உபயோகமுல்லை யென்றும், சொன் னார்.

முடிவுரையாகத் தலைவர் பேசுகை யில் பல விஷயங்களைப் பேசியபின் இந்தியாவின் ஐக்கியமின்மையே நம தது தேசத்தின் பல இராஜாங்க மாறு தல்களுக்கு காரணமென்றும் சொல் லி முடித்தபிறகு வந்தேமாதரத்து டன் கூட்டம் இனிது கலைந்ததென காரியதரிசி எழுதுகிறார்.

ஈ. வெ. ராமசாமியின் இலங்கை சொற்பொழிவு.

24. பக்கம் கொண்டது. விலை பை- 0-0-6 100-புத்தகம்ரூ1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ-அனுப்பினால் 100-புத்தகம் தபால் சில வில்லாமல் அனுப்பப்படும்.

மானேஜர்
"குடி அரசு" ஈரோடு.

குருட்டு நம்பிக்கைக்கு ஆதாரம் கும்பகோணை மகாமகம்.

நாகை சுயமரியாதைச்சங்கம்.

ஆலோசனைக்கூட்டம்:-

நாகை தாலூக்காவிலுள்ள சுயமரி யாதைச்சங்கங்களுக்கும், சுயமரியா தைத்தோழர் களுக்கும் அனுப்பிய அ ழைப்பிற்கிணங்கி தோழர்கள் நமசி வாயம், பு. திருநாவுக்கரசு, நாராயண சாமிமுதலியவர்களும், மற்றும் பல தோழர்களும் 8,12-32ந்தேதி நாகை சுயமரியாதைச்சங்கக் கட்டிடத்தில் நடந்த, ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். நாலுக மகா நாட்டை ஜனவரி மாதத்தில் நடத்து வதா? அல்லது மார்ச்சு மாதத்தில் நடத்துவதா? என்ற பிரச்சினை எழும் பியது.

இறுதியாக எல்லோரும் மகாநாட் டைமார்ச்சுமாதத்தில் நடத்தவேண் டுமென்று அபிப்பிராயப் பட்டதால் "நாகை மகாநாட்டைக் கண்டிப்பாக மார்ச்சுமாதத்தில் நடத்தவேண்டு மென்ற" தீர்மானம் ஏகமனதாக நிறவேறியது. எனகாரியதரிசி கே. முருகேசம் எழுதுகிறார்

வாராந்திரக்கூட்டம்

11-12-32ந்தேதி இரவு 7மணிக்கு இச்சங்க வாராந்திரக் கூட்டம் சங்கத் தலைவர் தோழர். ஆர். வி. கோபால் தலைமையில்கூடியது.

தோழர். வி. சாமிநாதன் அவர்க ளால் சுயமரியாதைக்கீதம் பாடப்ப ட்டபின் "காஸ்திகமும், சுயமரியா தையும்" என்ற விஷயத்தைப்பற்றி தோழர்கள் கே. முருகேசன், எம். ஆர். பதி, வி. சாமிநாதன் முதலியவ ர்கள் பேசினர்கள். தலைவர் முடிவு ரைக்குப் பிறகு தோழர். என். நூஹு, என்பவரால் சங்க அங்கத்தி னர் களுக்கு ஓர் தேநீர்விருந்து அளி க்கப்பட்டது. எனகாரியதரிசி கே. முருகேசம் எழுதுகிறார்.

டாக்டர் சிங்காரம் அவர்களின் கைதந்த தைலம்.

இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.

செம்மேகம், கருமேகம், மேக ஊரல், தடிப்புடன் கூடிய மேகப்படைகள், கண்டமாலை, விப்புருதி கட்டிகள், வலி குன்மம், கிரந்தி, குஷ்டம், விக்கப்புற்று, சூலை கணுச்சூலை, பாரிச வாய்வு, மூடக்கு வாய்வு, சாமத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை கால் பிடிப்பு, மகமதப்பு, நிமிர் வாய்வு, புண், புரைகள் ஆராத ரணங்கள், நரம்பு பிடிப்பு முதலிய பலவித கடின நோய்களை குணம் செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித தூர் நீரையும் போக்கி சரீரத்திற்கு நல்ல தேஜஸைக் கொடுக்கும். பத்தியமில்லை.

60 வேளை மருந்து விலை ரூ. 10—0—0.
20 ,, 4—0—0.

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம்.

மலாய்நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.

முழுலாபம் தேடிவிப்பவர்களுக்கு கேட்லாக் இலவசமாய் அனுப்பப்படும்.

ஏ. சி. சிங்காரம் அன் கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தேப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அறிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது.

பிரதி ஒன்றுக்கு விலை அணை. 0—6—0

நாஸ்திகன்

C. K. குப்புசாமி, சேலம் பட்டு ஜவுளி, பெரியகாஞ்சிபுரம்.

ராசிபாளையம்

உண்மை நாடுவோர் வாசகசாலை.

ஷை வாசகசாலையின் வாராந்திரக் கூட்டமொன்று 10-12-32 இரவு 8 மணிக்கு வாசகசாலையின் வாடகைக் கட்டிடத்தில் வாசகசாலைத் தலைவர் தோழர் ஆர். ஐ. இராமசாமி தலைமையில் கூடிற்று அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

பழக்க வழக்கமென்னும் பெயரால் நடைபெறும்மூடப்பக்க வழக்கங்களைக்கண்டித்தும், மேல்நாடுச் சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பியதோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களைப் பாராட்டியும், தோழர் ஆர். கெ. ஷண்முகம் அவர்கள் மனைவியார் இறந்தமைக்கு வருந்தி அனுதாபம் தெரிவித்தும், இன்னும் பலதீர்மானங்களும் நிறைவேறியபின் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

சேலம்.

சுயமரியாதைப் பொதுக்கூட்டம்

சேலம் சுயமரியாதைச்சங்கத்தின் ஆதரவில் சுயமரியாதைப் பார்க்கில் 11-12-32 ஞாயிற்றுக்கிழமை மாலை 6½ மணிக்கு சேலம் கல்லூரி மாணவர் தோழர் ஆர். நடேசன் அவர்கள் தலைமையின் கீழ் 'தீண்டாமையும், சங்கராச்சாரியும்' என்னும் விஷயத்தைப் பற்றி சுயமரியாதைத் தோழர்களான ஜலகண்டாபுரம், எஸ். ராமநாதன், எ. சித்தையா, கந்தசாமி ஆகியவர்கள் விளக்கமாக சொற்பொழிவாற்றினர்கள். தலைவர் முடிவுரையில் காந்தியாரின் தேசிய சூழ்ச்சிகளை எடுத்து தெளிவாகச்சொன்ன பின்னர் தோழர் சித்தையா அவர்களால் வந்தேமாதரம் முழங்கப்பட்டு கூட்டம் 9 மணிக்குக் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்

அதிர்ஷ்டம் மாத்திரமல்ல
அறிவுதானம் செய்த பலனுமுண்டு.

பச்சையப்பன் கலாசாலை

லாட்டரி.

ரூ. 1,00,000- பிரைஸ்கள் 3059. முதல்பிரைஸ் ரூ. 20,000
ஒரு டிக்கட் விலை. ரூ. 1
முடியும் தேதி 30-6-33. எடுக்கப்படும் தேதி 31-7-33.
மற்ற விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

காரியதரிசி,
வி. திருவேங்கிடசாமி எம். ஏ.
பச்சையப்பன் ஹாஸ்டல், சேத்துப்பேட்டை, மதராஸ்.

தீண்டாமை விருட்சமைதன்னை?

அறிவுள்ளவர்களாகவும், மூடநம்பிக்கையற்றவர்களாயும், வாழ விரும்புகிறீர்களா?

அர்த்தமற்ற ஓர்வார்த்தையை நம்பி ஏமாந்து, காலத்தை வீணாக்கி, செல்வத்தையழித்து சிதைந்து சோம்பேரிகளாய், வறியராய், வாழ விரும்புகிறீர்களா? இல்லையெனில் தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்., எழுதிய "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற நூலை இன்றே வாங்கிபாருங்கள். உண்மைதெரியும், அஞ்ஞானம் தெளியும், சந்தேகம்தீரும், கடவுளைப்பற்றிய அர்த்தமற்ற பயமும், சந்தேகமும் நீங்கும். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழி முந்தியதா, முட்டை முந்தியதா? என்ற சந்தேகங்களுக்குத் தகுந்த விடைகளுடன் 80-பக்கங்களுக்கு மேற்கொண்டது

விலை 4-அணை,

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணை தபாற்பில்லைகள் அனுப்பவும்.

கிடைக்குமிடம்:— மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்படள முற்றுகை	0—4—0
4.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
5.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
6.	சுயமரியாதை தத்துவ கீதக்கள் ...	0—4—0
7.	சென்னை லொக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0
8.	மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ...	2—0—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அடிமைகள் ...	0—12—0

The crux of the Indian Problem
By Dr. PARANJPYE (in English.)
விலை ரூ. 1—0—0
"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ. 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக விலையத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.



Dr.T.K.V. Chalam.

Coshaye office pillss.
கோஷாயி
ஆபீஸ் மாத்திரை


மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு.

Proprietor. T. K. வெங்கடாசலம்,
(Disciple of Late Dr B. A. Ehiraj Cholera Bairi)
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

மதத்தை ஒழிப்பது
உயர்வு தாழ்வை ஒழிப்பதாகும்.

ரூபா 3-6-0 க்கு 3-கடிகாரங்களும் இதர வேகுமதிகளும்.

சத்தேகமில்லை, ஆச்சரியமில்லை, உண்மை!



ஆட்டோ சுகுதாஜ் (இந்து பூத்த புஷ்பங்களின் சத்து) மணம் மிகுந்தது. 3-நாள் உபயோகத்துக்குரிய புட்டி 3-அணை. படைமருந்து 12 மணி நேரத்தில் பரிபூரண குணம் டப்பி 1-க்கு 3அணை. மேற்படி 2-தினுசுகளும் சேர்ந்தாவது தனித் தனியாவது 18-புட்டிகள் ரூபா 3-6-0 க்கு ஆர்டர் செய்தால், கோல்ட் கிப் பொண்டன் பேனை 1. 500-கஜம் வரை வெளிச்சம்தரும் பாட்டரி லாம்ப் 1, தூதன கைக்கெடியாரம் 1, பர்மா டைம்பீல் அல்லது ரயில்வே மெயில்காட் லீவர் பாக்கெட்வாச் 1-ம், இலவசமாக அனுப்பப்படும். ஒவ் வொரு கடிகாரமும் 10 வருடம் உத்தரவாதம். சாமான்கள் பிடித்தமில்லாவிடில் பணம் திருப்பிக்கொடுக்கப் படும். பாக்கிங் தபால் செலவு தனி.

விலாசம்:—Sharma Brothers & Co.,
Post Box No. 2412, Section 96,
Calcutta.

ஓ! பலங்குன்றியவர்களே! தாதுபுஷ்டியில்லாதவர்களே! கிழத்தன்மையடைந்தவர்களே!

இதோசாப்பிடுங்கள்
தங்கபஸ்பம்

இதை 1½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார தாது புஷ்டியும், பலமும், சுத்தவீரியமும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது; பத்தியமில்லை. நாட்பட்ட அல்லது புதிதாயுண்டான எல்லாவியாதிகளையும் நீக்கி ஆண்மைத்தன்மையை உண்டாக்கி தாதுபுஷ்டியைக்கொடுக்கும்.
48 நாள் பஸ்பம் ரூ. 20. 21 நாள் பஸ்பம் ரூ. 10.

குரு நாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆபரேஷன் அவசியமில்லை. முளை தானே கரையும். சீழ் மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும் உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

தாளக பஸ்பம்-இருமலுக்கு.

காசம், கூயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோளை, பக்கட்டு இவைகள் எவ்வளவு தாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8 விதகாசமும் அவசியம் நீரும் அனுபவத்தில் கைகண்டது. புட்டி 1-க்கு ரூ. 4.

அப்ரேக் சென்தூரம்-நீரழிவுக்கு

ஜலந்திபோகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றித்த வீர்த்தியையும் தேக புஷ்டியையும் தரும். சகலமேகமும் நீங்கும். தளுக்கற்றது. புட்டி 1-க்கு ரூ. 15. வி. பி. வேறு.

வைத்திய ஆசிரியர் **மலையப்பசாமி,**
வைத்தியசாலை, பழனி, S. I.,

கடவுள் உணர்ச்சியை ஒழிப்பது
பணக்காரத்தன்மையை ஒழிப்பதாகும்.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கலிக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரை ஷோக் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்ப ல் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள திப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணு. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇரா மாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களை யும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற் றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணு. 0—4—0
இரண்டாம் பாகம் அயோதியா காண்டம் அணு. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங் களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரி யர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய டத்தகம் 150 பக்கம். இதன் விலை அணு. 0—4—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக்காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணு. 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்த மற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணு 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணு 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதி யதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்— நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணு 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணு 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்ல வென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கய வர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்க ளால் எழுதப்பட்டது.

இதன் விலை அணு 0 2—0

கடவுளும், பிரபஞ்சமும்.

"கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாதை தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேரி களாய் வாழ்வது பதினெமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்தி லிருந்து தெரியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கற்லிலுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளைக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணு 0—4—0.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

காந்தியின் உண்மைத் தோற்றம்.

விலை பை. 0—0—3

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சிப்பை எழுதியது விலை அணு. 0 8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு. 0—6—0

மநுநீதி மருமம்.

விலை அணு. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணு. 0—2—0

சுயமரியாதைப்பாடல்.

விலை அணு 0—2—0.

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணு 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர், ராமம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.